RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 11 • இதழ் 3 • செப்டம்பர் 2026 • விலை ரூ.18/-

வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்

கற்பனை
சிறப்பிதழ்



TM
PRIMA CLUB
BY RAMRAJ
MEN'S PREMIUM FORMAL WEAR

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

சிந்தனைக்கும் கற்பனைக்கும் உள்ள தொடர்பை விளக்கி
எதிர்காலக் கனவுகளை நனவாக்கும் வழிகளைச் சொல்லி
வளமும் நலமும் பெற்று வாழ்வதற்கு வழிகளைக் காட்டும்

கற்பனை
சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மதிப்பிற்குரியவர்களுக்கு...

வணக்கம்.

கற்பனையே மனிதகுல முன்னேற்றத்தின் ஆதார சக்தி. ஒவ்வொரு தனிமனிதருக்கும் வாழ்வில் உயர்வதற்கு ஊக்கம் தரும் கருவி. மின்சார விளக்கின் திறனை கற்பனை செய்ய முடிந்த தாமஸ் ஆல்வா எடிசன் என்கிற அறிவியல் அறிஞர்தான் இந்த உலகத்திற்குப் புதிய வெளிச்சம் கொடுத்தார். அவர்தான், 'புதிய கண்டுபிடிப்பு நிகழ வேண்டுமென்றால் நல்ல கற்பனையும், பழைய பொருட்களும் போதும்' என்றார். ஒன்றுக்கும் உதவாத குப்பை என்று மற்றவர்கள் கருதும் பழைய பொருட்களும், கற்பனை மிகுந்தவர்களின் கையில் கிடைத்தால் புதிய கண்டுபிடிப்புகளுக்கான கருவிகளாக மாறிவிடும். இதுதான் கற்பனையின் பலம். அதனால்தான் அது உலகை ஆள்கிறது.

கற்பனைத் திறனே மனிதனை மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பறவை பறப்பதைக் கண்ட மனிதன், தானும் பறந்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்தான். பல முயற்சிகளுக்குப் பிறகு விமானம் கண்டுபிடித்து வானில் பறந்தான். அறிவையும் அனுபவத்தையும் இணைக்கிறது கற்பனை. முயற்சியை நோக்கி மனிதனை உந்தித் தள்ளுகிறது. அதுவே நாம் காணும் அனைத்து மாற்றங்களுக்கும் விதையாகிறது.

விளையாட்டு வீரர்கள் சோர்ந்து போகாமல் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ள ஓர் உளவியல் பயிற்சி தருகிறார்கள். போட்டியில் வெற்றி பெறும் அந்தத் தருணத்தை ஒவ்வொரு நாளும் மனதில் திரும்பத் திரும்பக் கற்பனை செய்யும்படி கூறுகிறார்கள். அந்த நேர்மறைக் கற்பனை அவர்களின் வெற்றிக்கு உதவுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கவிஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் மட்டும் கற்பனைத்திறன் மிகுந்தவர்கள் என்கிற எண்ணம் பொதுவாக இருக்கிறது. அது தவறு. இந்த உலகில் பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் கற்பனைத் திறனோடுதான் வளர்கிறது. ஒரு மரக்குதிரையில் ஏற்றி உட்கார வைத்தால் நிஜக்குதிரைமீது அமர்ந்த உற்சாகத்தோடு குழந்தை இருக்கும். பொம்மை காரில் அமர்ந்து ஓட்டினால், நிஜ கார் ஓட்டும் பரவசத்தோடு ஓட்டும். தூங்கும்போது சிரிக்கிற, அழுகிற ஒவ்வொரு குழந்தைக்கும் பின்னால் விவரிக்க முடியாத கற்பனை இருக்கும்.

ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு சமூகத்திற்கும், ஒவ்வொரு நாட்டுக்கும் கற்பனை என்பது ஆக்சிஜன் போல அவசியமானது. 'இதனால் இது இப்படி இருக்கிறது' என்று அறிவின் மூலம் புரிந்துகொண்டால், 'இதை எப்படி மாற்றி அமைக்க முடியும்?' என்று கற்பனை கொண்டு சிந்திக்க முடியும். அறிவு நமக்கு 'யதார்த்தம் இதுதான்' என்று காட்டும். 'இனிமேல் எது யதார்த்தமாக இருக்க வேண்டும்' என்பதைக் கற்பனை தீர்மானிக்கும்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் அஸ்திவாரம்கூட ஒரு நேர்மறையான கற்பனையில் இருந்துதான் தொடங்கியது. வேட்டி என்பது நமது பாரம்பரிய உடை. அதை உடுத்துபவருக்கு எந்த மதிப்பும் இல்லை. வேட்டியை நெய்து தருகிற நெசவாளர்களுக்கும் எந்த மரியாதையும் இல்லை என்கிற நிலைதான் 45 ஆண்டுகளுக்கு முன்பு நான் கண்ணால் பார்த்தது, அனுபவத்தால் உணர்ந்தது.

துணிக்கடைக்குச் சென்று 'சட்டை பிட் வேணும்' என்று வாடிக்கையாளர் கேட்டால், கண்ணில் படும் மேல் அடுக்கு அலமாரியிலிருந்து எடுத்துத் தருவார்கள். 'வேட்டி வேணும்' என்று அதே வாடிக்கையாளர் கேட்டால், கீழே குனிந்து அலமாரியின் கடைசி அடுக்கிலிருந்து கஷ்டப்பட்டு எடுத்துத் தருவார்கள். கடையில் ஒரு பொருள் எங்கே இருக்கிறது என்பதை வைத்தே அதன் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொள்ள முடியும். வேட்டி வியாபாரத்திற்கு வந்த சில மாதங்களில் இந்த யதார்த்தம் நன்கு புரிந்துவிட்டது. 'இதற்கு எதிர்காலம் இல்லை' என்பதை எல்லா வகையிலும் அறிவு எனக்கு எச்சரித்தது. 'நம் பாரம்பரிய உடைக்கு ஏன் மதிப்பில்லாமல் போனது? அதன் மதிப்பையும், நெசவாளர்களுக்கான மரியாதையையும் மீட்பதற்கு என்ன செய்ய வேண்டும்? சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை வேட்டி உடுத்துவதை கம்பீரமாக உணர்ந்தால் எப்படி இருக்கும்?' என்கிற கற்பனைதான் எனக்கு புதிய உத்வேகத்தை அளித்தது.

'இது சாத்தியமா?' என கேட்டவர்களுக்கு, 'இன்று நடைமுறையில் இருக்கும் அனைத்துமே ஒரு காலத்தில் வெறும் கற்பனையாக மட்டுமே இருந்தவை' என்று பதில் சொல்லி இருக்கிறேன். ஒரு வாசல் மூடினால் இன்னொரு வாசல் திறக்கும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

எதிர்காலத்தைக் கற்பனை செய்வது எளிது. அதை நிஜமாக்குவதற்கு இடைவிடாத உழைப்பு வேண்டும். தொழில் தொடங்குவதற்கு முதலீடு தேவைப்பட்டது போல, தொழிலை வளர்த்தெடுப்பதற்கும் புதிய புதிய கற்பனைகள் தேவைப்பட்டன. உதாரணமாக நவீன வாழ்க்கை முறைக்கு மாறிய வாடிக்கையாளர்களுக்கு பர்ஸ் வைக்கவும், செல்போன் வைக்கவும் பாக்கெட் கட்டாயம் தேவை. 'வேட்டியில் பாக்கெட் இல்லை, அதனால் வேட்டி உடுத்துவது நடைமுறை வாழ்வுக்குப் பொருந்தாது' என நினைத்தார்கள். பாக்கெட் வைத்த வேட்டியை ராம்ராஜ் நிறுவனம் அறிமுகம் செய்தபோது மக்கள் வரவேற்றார்கள். அவசரகதியான வாழ்க்கை முறையில், கட்டிய வேட்டி இடுப்பிலிருந்து நழுவாமல் இருக்குமா என்கிற கவலை இளைய தலைமுறைக்கு எழுந்தபோது, 'ஒட்டிக்கோ... கட்டிக்கோ' என்ற முழக்கத்தோடு வெல்க்ரோ வேட்டியை அறிமுகம் செய்தோம்.

The Culturepreneur

'வயதானவர்கள் உடுத்துவது வேட்டி' என நினைத்து இளைஞர்கள் ஒதுக்கியபோது, பார்டர் நிறத்துக்கு ஏற்ப சட்டைகளையும் சேர்த்து அறிமுகம் செய்தோம். வேட்டியும் அதன்மூலம் 'ஃபேஷன்' உடையாக மாறியது. ஒவ்வொரு சிக்கலையும் கண்டறிந்து தீர்த்தபோது ஏற்கனவே இருந்த யதார்த்தம் தலைகீழாக மாறியது. கடையில் அலமாரியின் கடைசி ரேக்கில் வைத்த நிலையை மாற்றி, வேட்டிக்கு என்றே ராம்ராஜ் காட்டன் ஊர் ஊராக தனி ஷோரூம் திறந்தது. தொழில் தொடங்கியபோது ஆரம்ப கால கற்பனை ஊக்கத்தை அளித்தது. கடினமான சூழலில் 'இது மாறிவிடும்' என்கிற நம்பிக்கையைக் கற்பனையே கொடுத்தது. சோர்ந்துவிடாமல் இலக்கு வைத்து உழைக்க வேண்டும் என்று கற்பித்தது.

கற்பனையின் உண்மையான சக்தியே, அது எண்ணத்தை செயலாக மாற்றும் வல்லமை கொண்டது. தீராத தாகத்தைக் கொடுக்கக்கூடியது. எந்த ஒரு பெரிய சாதனைக்குப் பின்னாலும், ஒரு கற்பனை அல்லது கனவு நிச்சயம் இருக்கும். மனித மனநிலையிலும் கற்பனை பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் கற்பனைத் திறனும், பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள், தொழிலாளர்களின் உழைப்பும் வேட்டி உடுத்துபவர்களை மதிப்புக்குரியவர்களாக மாற்றிக் காட்டி இருக்கிறது.

கற்பனை என்றால் அது இல்லாததை நினைப்பது மட்டும் அல்ல. நம்மிடம் இருக்கும் அனுபவங்கள், அறிவு, உணர்வுகள், நினைவுகள் ஆகியவற்றை ஒன்றோடொன்று இணைத்து, இன்னும் இல்லாத ஒன்றை உருவாக்கும் அபாரமான திறன். அது ஒரு விதையைப் போன்றது. அதற்குள் இருக்கும் மரத்தைக் காணும் திறன் உள்ளவர்களால் மட்டுமே, அந்த விதைக்கு நீர் ஊற்றி உரம் போட்டு பல ஆண்டுகள் பராமரிக்க முடியும். வீரியமிக்க கற்பனைகளை கைக்கொள்வோம். அது நிகழ்காலத்தின் சவால்களை எதிர்காலத்தின் சாதனைகளாக மாற்றும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

கே.ஆர்.நாகராஜன்

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

குழந்தைகள் போல கற்பனை செய்யுங்கள்!

இரண்டு நண்பர்கள் தொலைதூர நகரத்துக்குக் காட்டுவழியே பயணம் போனார்கள். இரவு நெருங்கியபோது, தங்குவதற்கு இடம் தேடினர். காட்டைத் தாண்டியதும் வந்த கிராமத்தில் ஒரு முதியவரிடம் உதவி கேட்டனர். இருவரையும் தனித்தனியாக இரண்டு அறைகளில் தங்கவைத்த முதியவர், "காலையில் பார்க்கலாம்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

முதல் அறையில் தங்கியவன், மறுநாள் காலையில் கண்கள் சிவக்க எழுந்து வந்தான். விசாரித்தபோது, "இங்கு உணவே இல்லை. பசியில் உறக்கம் வரவில்லை" என்றான். அவனை அழைத்துக்கொண்டு இன்னொரு அறைக்குச் சென்றார் முதியவர். அங்கிருந்த அவன் நண்பன் உற்சாகமாக இருந்தான். விசாரித்தபோது, "நல்ல உணவு, நல்ல உறக்கம். அதனால் உற்சாகமாக இருக்கிறேன்" என்றான்.

முதல் நண்பன், "உன் அறையில் மட்டும் உணவு இருந்ததா? நீ அதிர்ஷ்டசாலிதான்" என்று பொறாமையுடன் சொன்னான். அதற்கு இரண்டாமவன், "உணவாக எதுவும் இல்லை. ஆனால், உணவு சமைக்கத் தேவையான அத்தனை பொருள்களும் இருந்தன. நானே சமைத்து சாப்பிட்டேன்" என்றான். அப்போதுதான் முதல் நண்பனுக்குத் தன் அறையிலும் அப்படி சமைக்கத் தேவையான அனைத்தும் இருந்தது நினைவுக்கு வந்தது.

பலரும் இப்படித்தான் தங்கள் கண்ணெதிரே இருக்கும் வாய்ப்புகளை கவனிக்கத் தவறுகிறார்கள். உண்மையில் வாய்ப்பு என்பது வெளிப்படையாக நம் கண்களுக்குத் தெரிவதில்லை. நம்மைச் சுற்றி இருக்கும் ஏதோ ஒன்றை வைத்து எதைச் செய்வது என்று நம் கற்பனை விரிகிறதோ, அதைப் பொறுத்தே வாய்ப்பு அமைகிறது. அனைவரையும் சுற்றி வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன. எவர் கண்களுக்கு அது வாய்ப்பு என்று தெரிகிறதோ, அவரே அதிர்ஷ்டசாலி. குழந்தைகள் போலக் கற்பனை செய்யும் திறன் இருந்தால் அதை அடையலாம்.

குழந்தைகளைக் கதை சொல்லச் சொன்னால், அவர்களின் கற்பனை சிறகை விரித்துப் பறக்கும். அந்தக் கற்பனையில் அவர்களிடம் நாய்களும் பூனைகளும் பேசும். நிலா ஓடிவந்து அவர்களைத் தாலாட்டித் தூங்க வைக்கும். வளர வளர நமக்குள் இருக்கும் குழந்தையை நாம் தொலைத்துவிடுவது போல, கற்பனைத் திறனையும் தொலைத்துவிடுகிறோம். 'நாய் எங்காவது பேசுமா?', 'நிலா நம்மிடம் ஓடிவருமா?' என்று அறிவின் துணைகொண்டு கேள்விகள் கேட்டு நம் கற்பனையைக் கட்டிப் போடுகிறோம். வேலை, தொழில், அவை சார்ந்த

பிரச்சனைகள், நெருக்கடிகள், நேரமின்மை என்று எல்லாமும் சேர்ந்து நம்மை வேறு எதையும் யோசிக்க விடாமல் செய்கின்றன.

கற்பனைத்திறன் என்பது, நடக்கவே நடக்காத ஒரு விஷயத்தை யோசிப்பது மட்டுமில்லை. எதிர்காலத்தில் நிஜமாக நடக்கப் போவதையும் யோசிப்பதுதான்! 'கற்பனை என்பது புதுமையைப் படைக்கும் திறன் மற்றும் அதற்கான வாய்ப்புகளைக் கண்டறியும் திறன்' என ஆக்ஸ்போர்டு அகராதி அர்த்தம் சொல்கிறது.

ஒரு வேலையில் இருப்பவர், 'இன்னும் 10 ஆண்டுகளில் நான் இப்படிப்பட்டவராக மாறுவேன்' என்று யோசிப்பதும் கற்பனைத் திறன் இருந்தால்தான் சாத்தியம். ஒரு தொழில் செய்பவர், 'இன்னும் 5 ஆண்டுகளில் என் தொழில் எப்படி வளர்ந்திருக்கும்' என்று நினைப்பதும் கற்பனைத்திறனே! அதாவது, 'இப்போது இருப்பதைவிட நான் சிறப்பாக மாறுவது எப்படி' என்று கனவு காண்பது! அந்தக் கனவை நிஜமாக்குவதற்கான முயற்சிகளை அடுத்து அவர்கள் செய்தாக வேண்டும்.

வாழ்க்கை வளத்துக்கான கற்பனைகளை எப்படிச் செய்வது?

● அமைதியாக இருக்கும்போதுதான் சிந்தனையும் கற்பனையும் சாத்தியம். வேலைகள் இல்லாத ஓய்வு நேரத்தில் செல்போன், டி.வி என எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு அமைதியாக அமர்ந்து யோசியுங்கள். உங்கள் வேலை அல்லது தொழில் தொடர்பாகப் பார்த்தது, படித்தது, கேட்டது என்று பலவற்றையும் இணைத்து யோசியுங்கள். புள்ளிகளை இணைத்து அழகிய கோலம் உருவாவது போல, நிஜங்களிலிருந்து புதுமையான கற்பனை உருவெடுக்கும்.

● ஒரு பாத்திரத்தில் திரவம் நிரம்பியிருப்பது போல, நம் உடலுக்குள் ஆன்மா இருக்கிறது. அது விதவிதமாகக் கற்பனை செய்கிறது. ஆனால், மனம்தான் அதை அடக்கி வைக்கிறது. மாதம் ஒரு லட்ச ரூபாய் சம்பாதிக்கும் ஒருவர், பத்து லட்சம் ரூபாய் சம்பாதிக்கும் வாய்ப்பைப் பற்றி யோசித்தால், 'இதெல்லாம் நடக்கிற விஷயமா? நம்புகிற மாதிரி எதையாவது நினைத்துப் பார்' என்று மனம் அவரைக் கட்டுப்படுத்துகிறது. ஆன்மாவை சுதந்திரமாகக் கற்பனை செய்ய விடுங்கள்.

● "ஒரு செயலைச் செய்யும்போது 'நம்மால் முடியும்' என்று நீங்கள் நினைத்தால் அதை சாதிப்பீர்கள். 'முடியாது' என்று நினைத்தால், உங்களால் அதைச் செய்யவே முடியாது" என்று ஹென்றி ஃபோர்டு சொன்னார். நம் கற்பனைகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் எல்லை வகுத்துக்கொள்வது ஆபத்தானது. 'நம்மால் கார் ஓட்டவே முடியாது' என்று நம்பும் ஒருவர் எந்தக் காலத்திலும் கார் டிரைவிங் பழக முடியாது. 'இது என்ன பெரிய சிரமம்? இதைவிடக் கடினமான விஷயங்களை நான் செய்திருக்கிறேன்' என்று நினைக்கும் ஒருவரால் உடனே கற்றுக்கொள்ள முடியும். மாரத்தான் ஓட்டப்பந்தயம் ஓடும் ஒருவர், வெற்றிக்கோட்டைத் தான் தொடும் தருணத்தைக் கற்பனை செய்தபடி ஓடிப் பயிற்சி எடுத்தால், அவரால் நிச்சயம் முடியும். கற்பனைகளுக்கு எல்லை நிர்ணயிக்காதீர்கள்.

● மனதின் கண்கள் பார்க்கும் ஒரு விஷயத்தை உங்களின் நிஜக் கண்கள் பார்க்க வேண்டும். உங்கள் மனம் கற்பனை செய்யும் ஒரு செயலை நிஜமாக்கிக் காட்ட நீங்கள் ஆசைப்படும்போது வாழ்வில் முன்னேறுவீர்கள். எனவே, கற்பனைத் திறனே உங்கள் முன்னேற்றத்துக்கு உதவியாக இருக்கிறது. உங்கள் கற்பனை செல்லும் திசையில் அடியெடுத்து வையுங்கள். இதற்கு முன்பு எப்போதும் போயிருக்காத பாதை என்றாலும்கூட, அந்தப் பயணம் உங்கள் வாழ்வை மாற்றும்.

● ஒவ்வொருவரும் இப்போது வாழும் வாழ்க்கைக்கும், அவர்கள் வாழ ஆசைப்படும் வாழ்க்கைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. தாங்கள் ஆசைப்படும் அந்த வாழ்க்கை குறித்த கற்பனையை அப்படியே வெறும் கற்பனையாகவே விட்டுவிட்டுப் போவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? அந்தக் கனவை நிஜமாக்கத் திட்டமிடும்போது நீங்கள் முன்னேற்றத்தின் முதல் படியில் அடியெடுத்து வைப்பீர்கள். ●

கற்பனையும் புதுமையும்!

இன்று நாம் காணும் அத்தனைப் பொருட்களும் யாரோ சிலரது கற்பனையில் உதித்து வடிவம் பெற்றவைதான்! புதுமைகள் அனைத்துக்கும் கற்பனையே அடித்தளம் அமைக்கிறது. கடலில் மீன்கள் வேகமாக நீந்திச் செல்வதைக் கண்டு மனிதர்கள் உருவாக்கியவையே படகுகளும் கப்பல்களும்! பறவை பறப்பதைக் கண்டு, 'மனிதர்கள் இப்படி வேகமாகப் பறந்து செல்ல என்ன வழி' என்று கற்பனை செய்ததன் விளைவே, விமானம் என்ற புதுமை. ஒருவர் கற்பனையால் உருவான ஒரு கருவி, பலரது மறு கற்பனைகளின் விளைவாக இன்னும் மேம்பட்டு பொது மக்கள் பயன்பாட்டுக்கு வருகிறது.

இந்த வகையில், கற்பனைக்கும் புதுமைக்கும் ஒரு தொடர்பு உண்டு. இதுவரை இல்லாத ஒன்றை ஒருவர் யோசிப்பது, 'கற்பனை'. அதை வைத்து மக்களின் ஏதோ ஒரு பிரச்னையைத் தீர்ப்பதும், ஒரு வேலையை எளிதாக்குவதும்தான் 'புதுமை'.

விதையும் நிலமும்!

கற்பனைகளை 'விதைகள்' என்று கருதிக்கொண்டால், நிஜம் என்பது 'நிலம்'. நாம் எதைக் கற்பனை செய்கிறோமோ, அதை மனதின் கண்களால் பார்ப்போம். கற்பனைகள் மூலம் மட்டுமே ஏதோ ஒன்றைப் புதிதாக உருவாக்கிவிட முடியாது. அதற்கு உழைக்க வேண்டும்.

புதிதாக ஒரு வீடு கட்ட வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அப்படி நினைக்கும்போது உங்கள் கையில் பணம் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அந்த வீட்டைப் பற்றி மனதுக்குள் கற்பனை செய்யுங்கள். அந்த வீட்டில் ஹால் எப்படி இருக்கும், அறைகள் எப்படி இருக்கும், அங்கே என்னென்ன இருக்கும் என்றெல்லாம் கனவு காணுங்கள். ஹாலில் இருக்கும் சோபாவில் அமர்ந்தபடி உங்கள் நண்பர்களுடன் பேசுவது போல கற்பனை செய்யுங்கள்.

உங்கள் கற்பனை சக்திக்கு ஒரு வலிமை உண்டு. அது இந்தப் பிரபஞ்சத்துக்கே உங்களின் கனவுகளை சொல்லிக்கொண்டு இருக்கும். கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பிரபஞ்சமே அந்தக் கற்பனையை நிஜமாக்க உதவிக்கு வரும். முழு முயற்சியைக் கொடுத்து உழைத்தால், அந்தக் கற்பனை நிஜமாகும். நீங்கள் எவ்வளவு அதிகமாக உழைக்கிறீர்களோ, அந்த அளவுக்கு வேகமாக இது நிஜமாகும். கற்பனைக்கும் நிஜத்துக்கும் இடையே ஒரு பாலம் உண்டு. நம் உழைப்புதான் அந்தப் பாலத்தைக் கடக்க உதவும்.

கனவில் வாழுங்கள்!

வாழ்வில் இதுவரை செய்திருக்காத ஒரு செயலைச் செய்வது போலக் கனவு காணுங்கள். ஏதோ ஒரு சூழலில், 'இந்த நேரத்தில் நான் அங்கு இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன்' என்று கனவு காணுங்கள். யாரோ ஒரு செயலைச் செய்ததை வைத்து, 'அவர் இடத்தில் நான் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேன்' என்று கற்பனை செய்யுங்கள். புதிய வாய்ப்புகளை அடையவும், பிரச்னைகளைத் தீர்க்கவும், அடுத்தவர்களின் நிலையைப் புரிந்துகொள்ளவும் இந்தக் கற்பனைகள் உதவும்.

கற்பனையால் உருவாகும் உலகம்!

நமக்கான நிஜ உலகை உருவாக்கும் திறமை நம் கற்பனை சக்திக்கு உண்டு. விளையாட்டு வீரர்கள் தங்களின் கற்பனை சக்தியால்தான் சாதனைகளைப் படைக்கிறார்கள். தினம் தினம் பயிற்சிகள் செய்து அந்த சாதனை வெற்றியை எட்டுகிறார்கள். பத்து நொடி நேரத்துக்குள் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தை ஓடி முடிக்க வேண்டும் என்பது ஒரு காலத்தில் மனிதர்களின் கனவாக மட்டுமே இருந்தது. அந்த இலக்கை அடைவதற்கு எப்படி ஓடுவது என்று கற்பனை செய்து பலரும் திரும்பத் திரும்ப பயிற்சி எடுத்தார்கள். அது ஒரு கட்டத்தில் அந்தக் கற்பனையை நிஜமாக்கியது.



ஒரு தொழிலதிபர் தனக்குள் கற்பனை செய்யவில்லை என்றால், ஒரு புது தொழில் சாம்ராஜ்ஜியத்தை உருவாக்க முடியாது. மார்க் சக்கர்பர்க் என்ற மனிதர் ஒரு கற்பனையை செய்யவில்லை என்றால், இன்றைக்கு ஃபேஸ்புக் என்ற சமூக வலைதளமோ, அந்த நிறுவனமோ கிடையாது. ஓவியர்கள், நடனக் கலைஞர்கள், இசையமைப்பாளர்கள் என்று பலரும் இப்படிக் கற்பனைகள் செய்துதான் புதிய ஓவியங்களையும் கலைகளையும் இசை வடிவங்களையும் உருவாக்குகிறார்கள். கற்பனைத் திறன் இல்லாதவர்கள் கலைஞர்களாவோ, அறிவியல் அறிஞர்களாகவோ, எஞ்சினியர்களாகவோ, தொழில் சாதனையாளர்களாகவோ உருவெடுக்க முடியாது.

ஒரு சாதாரணக் குடும்பத்தலைவர்கூட 'இந்த அறைக்கு எந்த வண்ணத்தில் பெயின்ட் செய்தால் அறை அழகாக இருக்கும்' என்பதை மனதுக்குள் கற்பனை செய்தே முடிவெடுக்கிறார். மனிதர்களை அவர்களின் கற்பனை சக்தியே இயக்குகிறது.

கற்பனையில் இருங்கள்!

'நான் எதிர்காலத்தில் என்னவாக ஆக விரும்புகிறேன் என்று மட்டும் கற்பனை செய்யாதீர்கள். அந்த எதிர்காலத்துக்கு உங்கள் கற்பனையின் வழியே சென்று, அப்படி ஆகிவிட்டது போலவே கனவு காணுங்கள்' என்று அறிஞர்கள் சொல்வார்கள். எல்லோருமே பணக்காரர் ஆக வேண்டும் என்று கனவு காண்கிறார்கள். ஆனால், சிலருக்கு மட்டுமே அது சாத்தியமாகிறது. ஏன் இந்த வித்தியாசம்? அவர்களின் கற்பனை சரியான திசையில் போகாததுதான் காரணம்!

ஒரு வேலைக்கான இன்டர்வியூவுக்குப் போகும் ஒருவர், அந்த இன்டர்வியூவில் கேட்கும் கேள்விகளுக்கு சிறப்பாக பதில் சொல்ல வேண்டும் என்று மட்டும் நினைத்தால் போதாது. அந்த வேலைக்குப் போய்விட்டது போலவே கற்பனை செய்ய வேண்டும். அமைதியாக ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டு, 'இப்படி உடை உடுத்திக்கொண்டு, இந்த வாகனத்தில் போய், இப்படிப்பட்ட நாற்காலியில் உட்கார்ந்து, இந்த வேலையை இப்படிச் செய்வேன்' என்று ஒவ்வொன்றையும் கற்பனை செய்து பார்ப்பது நல்லது. அப்போதுதான் அந்தக் கற்பனையின் மீது ஒருவித ஈர்ப்பு வரும். அதை அடைந்தே ஆக வேண்டும் என்ற உத்வேகம் ஏற்படும். அதற்கு என்ன வழி என்று மனம் சிந்திக்கத் தொடங்கும். ●

கற்பனையும் பகல் கனவும்!

'நம் அறிவைவிட நமது கற்பனை முக்கியமானது. ஏனெனில், அறிவுக்கு எல்லை உண்டு. நாம் அறிந்துகொண்டது, புரிந்துகொண்டது ஆகியவற்றிலிருந்து நம் அறிவு உருவாகிறது. ஆனால், கற்பனைக்கு எல்லைகள் இல்லை. நாம் இதுவரை அறியாத, இந்த உலகிலேயே இல்லாத விஷயங்களைக்கூட நம் கற்பனை சக்தியால் பார்க்க முடியும்' என்று புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் சொன்னார்.

கற்பனைத் திறன் இருப்பவர்கள்தான் எந்த வேலையிலும் சிறந்து விளங்குவார்கள். ஏனெனில், மற்ற எல்லோரும் செய்யும் வழக்கமான வேலைகளைக்கூட, எல்லோரையும் விட சிறப்பாகவும் வேகமாகவும் செய்வதற்கு என்ன வழி என்று அவர்கள் தங்கள் கற்பனை சக்தியால் கண்டுபிடிப்பார்கள். இதுவரை யாருமே செய்யாத விஷயத்தைக்கூட அவர்களால் புதிதாகச் செய்ய முடியும்.

தாங்கள் பார்த்தவை, கேட்டவை, படித்தவை, உணர்ந்தவை, சுவைத்து அறிந்தவை என்று எல்லாவற்றையும் தங்கள் மனதின் வழியே பார்த்து அவர்கள் புதிதாக ஒன்றை உருவாக்குகிறார்கள். மண்ணைக் கிளறி விதைகளை விதைத்து பயிர்களை உருவாக்கிய ஆதிமனிதன், 'இதைச் சுலபமாகச் செய்ய ஒரு கருவியை உருவாக்கினால் என்ன?' என்று கற்பனை செய்தபோதுதான் கலப்பை என்ற கருவி பிறந்தது. அதுதான் விவசாயம் என்ற முதன்மைத் தொழிலை உருவாக்கி நம் உணவுப் பிரச்சனையைத் தீர்த்தது. 'எத்தனைக் காலத்துக்கு விலங்குகளின் தோல்களையும் மரப்பட்டைகளையும் உடைகளாக அணிவது' என்று நம் மூதாதையர்கள் யோசித்து, பருத்தியிலிருந்து இழைகளை உருவாக்கினர். நெசவு என்ற கலையைக் கண்டறிந்தனர். அந்த மகத்தான கற்பனையிலிருந்துதான் நம் பாரம்பரிய உடைகளான வேட்டியும் சேலையும் பிறந்தன. இப்படி கார் முதல் கம்ப்யூட்டர் வரை எல்லாமே பலரின் கற்பனைகளிலிருந்து உருவான கருவிகள்தான். இவைதான் இன்று நம் வாழ்வை எளிமையாக்கி இருக்கின்றன.

கற்பனையைப் பல காரணங்களுக்காக நாம் பயன்படுத்துகிறோம். இந்த உலகம் குறித்த அனுபவங்களையும் அறிவையும் பெறுவதற்குப் பயன்படுத்துகிறோம். எந்த ஒரு விஷயத்தையும் மற்றவர்கள் எப்படி நினைப்பார்கள் என்று அறிந்து கொள்ளப் பயன்படுத்துகிறோம். பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப் பயன்படுத்துகிறோம். புதிய விஷயங்களை உருவாக்குவதற்குப் பயன்படுத்துகிறோம். இப்படிக் கற்பனை என்பது படைப்புத் திறனுடன் நேரடித் தொடர்பில் இருக்கிறது.

அதிகமாகக் கற்பனை செய்பவர்களை இந்த உலகம் ஏளனம் செய்கிறது. 'பகல் கனவு காண்பவர்கள்' என்று சொல்கிறது. ஆனால், பகல் கனவு என்பது நல்லதுதான்! தூக்கத்தில் கனவு காண்பவர்கள், அந்தக் கனவை நிஜமாக்க எந்த முயற்சியையும் செய்வதில்லை. விழித்திருக்கும்போதே கனவு காணும் பலரும் அந்தக் கனவை நோக்கிச் செல்வதற்கு உழைக்கிறார்கள். அந்த உழைப்பின் வழியே உயர்வு பெறுகிறார்கள்.

பகல் கனவு காண்பவர்கள், தங்கள் அறிவையும் கற்பனையையும் இணைக்கிறார்கள். தாங்கள் சந்தித்த பழைய அனுபவங்களிலிருந்து புதிதாக ஒன்றைச் செய்ய நினைக்கிறார்கள். தங்கள் எதிர்காலம் குறித்து தெளிவாகக் கற்பனை செய்கிறார்கள். தங்களைச் சுற்றியிருக்கும் மனிதர்களின் எதிர்மறை எண்ணங்களும், சூழலின் நெருக்கடிகளும் தங்கள் கனவை பாதிக்காதபடி பார்த்துக்கொள்கிறார்கள். ஒரு மனிதரின் கற்பனை, பல ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் நிறுவனமாக மாறும்போது, ஒருவரின் கற்பனை பலரின் வேலைகளை எளிதாக்கும்போது, இந்த உலகம் நன்மை பெறுகிறது. ●

இதுவரை பார்க்காததைப் பாருங்கள்!

இதைப் படிக்கும் இந்த நேரத்தில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? உங்களைச் சுற்றிலும் என்னென்ன பார்க்கிறீர்கள்? என்னவிதமான சத்தங்கள் உங்களுக்குக் கேட்கின்றன? இவை எல்லாமே உங்களுக்குள் என்ன மாற்றத்தை ஏற்படுத்துகின்றன?

இப்படி ஒவ்வொரு தருணத்திலும் உங்களால் கற்பனை செய்ய முடிந்தால், உங்கள் எதிர்காலத்தை சிறப்பாக மாற்றுகிறீர்கள் என்று அர்த்தம். இந்தக் கற்பனை செய்து பார்க்கும் பயிற்சியில் பல வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு டெக்னிக்கும் ஒவ்வொரு விதமான பலனைத் தருகிறது. அறிவியல்ரீதியாக ஆராய்ச்சி செய்து, இதை இப்போது நான்கு விஷயங்களுக்கு முக்கியமாகப் பயன்படுத்துகிறார்கள். அவை:

மன அழுத்தத்தை நீக்கும் கற்பனை: மனநல மருத்துவர்கள் இதை ஒரு சிகிச்சையாகவே அளிக்கிறார்கள். கடந்த காலத்தில் நிகழ்ந்த ஒரு மோசமான சம்பவம் காரணமாக ஒருவர் மன அழுத்த பாதிப்பில் இருப்பார். அவரை அந்த சம்பவத்தை அப்படியே விவரிக்கச் சொல்லி, அதன் பாதிப்புகளைக் குறைக்கும்விதமாக கற்பனை செய்ய வைப்பார் மருத்துவர். ஏதேதோ காரணங்களால் சமூகத்தையும் மற்றவர்களையும் எதிர்கொள்ள இயலாமல் தவிக்கும் மனிதர்களுக்கும் இப்படி சிகிச்சை தரப்படும். வேறு ஓர் இனிமையான சூழலில் இருப்பது போல கற்பனை செய்யும்போது மன அழுத்தம், பதற்றம் போன்றவை குறையும்.

நேர்மறைக் கற்பனை: ஏதோ ஒரு விஷயம் தவறாக நடந்து பாதிப்பு ஆகிவிடுமோ என்ற கவலையில் சிலர் இருப்பார்கள். ஒரு வியாபாரத்தை ஒருவர் இப்போதுதான் ஆரம்பித்திருப்பார். ‘இது சரியாக நடக்காமல் நஷ்டப்பட்டால் என்ன செய்வது’ என்று யோசித்தால், அவரால் நிம்மதியாகத் தொழில் செய்ய முடியாது. ஒரு வேலையை ஆரம்பிக்கும்போதே, ‘இதில் தோற்றுப் போய் மேலதிகாரி நம்மை தண்டித்தால் என்ன ஆகுமோ’ என்று கவலையில் ஒருவர் மூழ்கினால் அந்த வேலை சரியாகவே நடக்காது. இதுபோன்ற நேரங்களில்தான் நேர்மறைக் கற்பனை தேவை. ‘வியாபாரம் சிறப்பாக நடந்து நிறுவனம் வளர்கிறது’ என்று ஒருவர் கற்பனை செய்தால், அந்தக் கற்பனையே அவரை வளர்க்கும். வேலையில் சாதிப்பது போல கற்பனை செய்யும்போது, அந்த வேலையை சிறப்பாகச் செய்ய முடியும்.

செயலை மேம்படுத்தும் கற்பனை: தேர்வுக்குப் படிக்கும் ஒரு மாணவர், போட்டியில் பங்கேற்கும் விளையாட்டு வீரர், ஒரு கலையைச் செய்யும் கலைஞர், ஒரு வேலையைச் செய்யும் பணியாளர், தொழிலில் இறங்கும் தொழிலதிபர் என்று எல்லோருமே இந்தக் கற்பனையைச் செய்யலாம். தங்கள் செயலின் ஒவ்வொரு கட்டத்தையும் மனதுக்குள் கற்பனை செய்து பார்த்து, ‘இந்தக் கட்டத்தை இப்படிச் செய்வேன்’ என்று திட்டமிடலாம். இது அவர்களை ஜெயிக்க வைக்கும்.

எதிர்காலக் கற்பனை: வாழ்க்கையில் நீண்ட கால இலக்குகளை உருவாக்குவதற்கு இந்தக் கற்பனையைச் செய்யலாம். உதாரணமாக, ‘நான் கட்டப் போகும் வீடு இப்படி இருக்கும்’, ‘என் அறுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடும்போது நான் இப்படிப்பட்ட அந்தஸ்தில் இருப்பேன்’ என்பது போல எல்லாவற்றுக்கும் கற்பனை செய்யலாம். அந்தக் கற்பனையை நிஜமாக்க என்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுவதும் இதைப் போல முக்கியம்.

விடுமுறை நாளில் ஒரு விஞ்ஞானி வீட்டில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார். அவரின் நான்கு வயது மகன் அவரிடம் வந்து பேசிக்கொண்டே இருந்தான். அதைத் தொந்தரவாக நினைத்த அவர், அவனிடம் ஒரு பொம்மையைக் கொடுத்தார். “இதைப் பொருத்தி விளையாடு” என்று சொன்னார்.

அது ஒரு சீன பொம்மை. நேற்றுதான் கடையில் வாங்கி வந்தார். தனித்தனி பாகங்களாக இருந்ததைப் பொருத்தி பேட்டரியைப் போட்டால், ஒரு பஸ் ஓசை எழுப்பியபடி ஓடும். அவர் பொம்மையை வாங்கிவந்து, குறிப்புகளில் இருந்தபடி பாகங்களை இணைத்து அந்த பஸ்ஸை முழுமையாக்க முயன்றார். ஆனால், சின்னச் சின்னதாக ஏராளமான பாகங்கள் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் எண்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், எதை எங்கே பொருத்துவது என்று அவரால் முடிவுசெய்ய முடியவில்லை. ரொம்ப நேரம் முயற்சி செய்து பார்த்துவிட்டு அதை அப்படியே வைத்துவிட்டார்.

அந்த பொம்மையை பொருத்தும் வேலையைத்தான் தன் குழந்தைக்குக் கொடுத்தார் அந்த விஞ்ஞானி. அதைப் பொருத்துவதற்கான குறிப்புகள் இருந்த பேப்பரைக்கூட குழந்தையிடம் தரவில்லை. கடினமான ஆங்கிலத்தில் இருந்த அந்தக் குறிப்புகளைக் குழந்தையால் படித்து, அதன்படி யோசித்து பொம்மையைப் பொருத்த முடியாது என்று அவர் கருதினார். குழந்தை தன்னைத் தொந்தரவு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு வேலையாக மட்டுமே அவர் அதைக் கொடுத்திருந்தார்.

பத்து நிமிடங்கள் கடந்திருக்கும். திடீரென அந்த பஸ் சத்தம் எழுப்பியபடி ஓட ஆரம்பித்தது. விஞ்ஞானியின் மகன் அதைப் பார்த்து கைத்தட்டி சிரித்தான். “அப்பா, பஸ் சூப்பரா ஓடுது. வந்து நீங்களும் ஏறிக்குங்க. நாம தாத்தா வீட்டுக்கு இதுல போகலாம்” என்று கூப்பிட்டான்.

விஞ்ஞானி அதைப் பார்த்து அதிர்ச்சியாகிவிட்டார். ஆராய்ச்சி படிப்பு வரை படித்த தன்னால் ஒரு மணி நேரம் முயன்றும் அந்த பொம்மையைப் பொருத்த முடியவில்லை. இப்போதுதான் பள்ளிக்குப் போயிருக்கும் தன் மகனால் எப்படி அதைச் செய்திருக்க முடியும் என்று யோசித்தார். அப்போதுதான் அவருக்கு ஓர் உண்மை புரிந்தது.

அவர் அறிவின் துணையுடன் லாஜிக்காக யோசித்து, எதை எங்கே பொருத்துவது என்று செய்து பார்த்தார். குழந்தையோ தன் கற்பனைத் திறனை மட்டுமே பயன்படுத்தியது. எது எங்கே இருந்தால் அது முழுமையான பஸ்ஸாக மாறும் என்று கற்பனை செய்தது. அதனால் குழந்தை சாதித்தது.

‘இது என்ன?’ என்ற ஆர்வம்தான் குழந்தைகளின் கற்பனைக்குத் தீனி போடுகிறது. ‘இது இப்படி மாறினால் எப்படி இருக்கும்’ என்று யோசிக்க வைக்கிறது. அப்படி

கற்பனை தருமே குழந்தைக்கு வலிமை!

செய்து பார்க்கத் தூண்டுகிறது. வானில் நிமிர்ந்து மேகத்தைப் பார்த்தால் நம் கண்களுக்கு அவை மேகமாக மட்டுமே தெரியும். ஏனெனில், நம் அறிவு நமக்கு அதைத்தான் கற்றுக் கொடுத்திருக்கிறது. குழந்தைகள்தான் அந்த மேகத்தின் வடிவத்தைப் பார்த்து ‘குதிரை ஓடுது பாரு’, ‘யானை உட்கார்ந்த மாதிரி இருக்கு’ என்று கற்பனை செய்து சொல்கின்றனர்.

குழந்தைகளிடம் இந்தக் கற்பனைத்திறனை வளர்த்தால்தான், அவர்கள் பெரியவர்கள் ஆகும்போது எந்தத் துறைக்குப் போனாலும் சிறந்து விளங்குவார்கள். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

- கார்ட்டூன்களில் குழந்தைகள் பார்க்கும் உருவங்களோ, கேட்கும் கதைகளோ அவர்களுக்கு வெறும் பொழுதுபோக்கை மட்டுமே தருகின்றன. அவை குழந்தைகளுடன் உரையாடுவதில்லை. வெறுமனே காட்சிகளாகக் கடந்து செல்கின்றன. குரல்களும் இசையுமாக அவை இனிமையான காட்சி அனுபவத்தை மட்டுமே தருகின்றன. குழந்தைகளுக்கு சிந்திக்கும் வாய்ப்பை அவை வழங்குவதில்லை. குழந்தைகளின் மூளையில் கேள்விகளையும் அவை தூண்டி விடுவதில்லை. பெற்றோர்களோ, தாத்தா பாட்டியோ சொல்லும் கதைகள் அவர்களை சிந்திக்க வைக்கின்றன. ‘இது ஏன் இப்படி ஆனது?’ என்ற கேள்வியை அவர்கள் எழுப்பி விடை தேட முயல்கிறார்கள். தங்கள் கற்பனை உலகில் அவர்கள் புதுப்புது விஷயங்களைக் கட்டமைக்கத் தொடங்குகிறார்கள்.

- இன்று குழந்தைகளுக்கான ஆன்லைன் விளையாட்டுகள் ஏராளமாக வந்துவிட்டன. கம்ப்யூட்டரிலோ அல்லது பிளே ஸ்டேஷனிலோ உட்கார்ந்தால் நாள் கணக்கில் விளையாடலாம். அதேபோல விளையாட்டு பொம்மைகளும் விதவிதமாக வந்துவிட்டன. ரிமோட் மூலம் இயக்கும் பொம்மைகள் பலவும் இன்றைய குழந்தைகளை ரொம்பவே ஈர்க்கின்றன. இவற்றை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதைப் பல பெற்றோர்கள் பெருமையாகக் கருதுகிறார்கள். ஆனால், ஒரு குழந்தை களிமண்ணை வைத்தோ, சாதாரணமாக வெட்டி ஒட்டி விளையாடும் அட்டைகளை வைத்தோ விளையாடுவதுதான் சிறந்த அனுபவத்தை அதற்குக் கொடுக்கிறது. களிமண்ணைப் பிசைந்து ஒரு மான் உருவத்தைச் செய்யும் குழந்தை, அடுத்த நிமிடமே அதை ஒரு சைக்கிளாக மாற்றும். அட்டைகளையும் பேப்பர்களையும் மடித்து ஒரு கப்பலை உருவாக்கும் குழந்தை, அடுத்த நிமிடமே அதை ஆகாய விமானமாக மாற்றும். புலன் உணர்வுகளைக் கூர்மையாக்கும் இந்த மிகச்சிறந்த கற்பனைத்திறன் அவர்களுக்குள் ஊற்றெடுப்பது அவசியம்.

- ‘ஒரு குழந்தை பேசியும் எழுதியும் பார்த்து மொழிகளைக் கற்பதும், எண்களை அறிந்து கணக்குகளைப் போடுவதும் கல்வியறிவுக்கு அடிப்படைகள். அதேபோல கற்பனைத்திறனும் கல்வியறிவில் ஓர் அங்கம்தான்’ என்கிறார்கள் கல்வியாளர்கள். ஒரு செயலின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை அறிந்துகொண்டு, அதை சிறப்பாக மாற்றுவதற்குக் கற்பனை மூலமே கற்க முடியும். எதிர்காலத்தில் நிகழ இருக்கும் பல்வேறு விஷயங்களை எதிர்கொள்ளவும் கற்பனைத்திறனே அவர்களைத் தயார்படுத்துகிறது. அறிவியல் தேடல்கள், கலைப் படைப்புகள், உணர்வுகளை முறைப்படுத்துதல், அறம் சார்ந்த முடிவுகள் என்று எல்லாவற்றின் பின்னாலும் கற்பனையே பிரதானமாக இருக்கிறது.

- சிந்திக்கும் திறனை மனித இனத்தின் மிக முக்கியமான தனிப்பண்பு என்று சொல்வார்கள். அந்தத் திறமையே நம்மை தொழில்நுட்ப ரீதியாக இந்த அளவுக்கு முன்னேற்றம் காணச் செய்துள்ளது. சிந்தனைத் திறன் போலவே கற்பனைத் திறனும் நம் முன்னேறத்துக்கு முக்கியமானது. தான் பார்ப்பது, கேட்பது, அனுபவிப்பது ஆகியற்றின் மூலம் ஒரு குழந்தை தனது கற்பனையில் புதுமையான விஷயங்களைப் படைக்கிறது. ஒரு பிரச்சனைக்குத் தீர்வை நம் மனம் யோசிப்பதற்குக் கற்பனைத்திறன் அவசியம். அடுத்தவர்களின் அனுபவங்களை நாம் புரிந்துகொள்ளவும், நம் எதிர்காலத்துக்காகத் திட்டமிடவும் கற்பனைத் திறன் அவசியம். சிந்திக்கும் திறனும் கற்பனைத் திறனும் இணையும்போது ஒருவர் வாழ்வில் அற்புதங்கள் நிகழும்.



கற்பனையில் இத்தனை வகைகளா?

இப்போது சிக்கலான ஆபரேஷன்களையும் மருத்துவர்கள் சில நிமிடங்களில் செய்து முடிக்கிறார்கள். நெஞ்சு எலும்பையே பிளந்து பைபாஸ் ஆபரேஷன் செய்தாலும், நோயாளிக்கு வலி தெரிவதில்லை. காரணம், மயக்க மருந்து கொடுத்துவிட்டு ஆபரேஷன் செய்கிறார்கள். ஆனால், 180 ஆண்டுகளுக்கு முன்புவரை மயக்க மருந்து என்ற ஒன்றே கிடையாது. ஆபரேஷன் என்பது பயங்கரமான வலி நிறைந்த அனுபவமாக இருந்தது. ஆபரேஷன் வலியை விட நோயின் உபாதைகளே பரவாயில்லை என நிறைய பேர் நினைத்தனர்.

அந்த நேரத்தில், வலியே இல்லாமல் ஆபரேஷன் செய்வது பற்றி கற்பனை செய்தார் ஒரு டாக்டர். அமெரிக்காவைச் சேர்ந்த வில்லியம் மார்டன் என்ற பல் டாக்டர்தான் அவர். இதற்காக நீண்ட காலம் ஆராய்ச்சி செய்தார். ஈதர் என்ற வேதிப்பொருளைக் கொடுத்தால், வலியே தெரியாதபடி மனிதர்கள் மரத்துப் போய் தூங்குவார்கள் என்று அவர் கண்டுபிடித்தார். சக டாக்டர்கள் யாரும் அதை நம்பவில்லை.

1846-ம் ஆண்டு ஒரு நோயாளிக்குக் கழுத்தில் இருந்த கட்டியை அகற்றுவதற்காக ஆபரேஷன் நடந்தது. அந்த நோயாளி, டாக்டர் மார்டனின் பரிசோதனைக்கு ஒப்புக்கொண்டார். பல டாக்டர்கள் அவநம்பிக்கையுடன் வேடிக்கைப் பார்க்கக் கூடியிருக்க, அந்த நோயாளிக்கு ஒரு விசேஷ கருவி மூலம் ஈதரை சுவாசிக்கக் கொடுத்தார் மார்டன். நோயாளி சில நிமிடங்களில் மயங்க, ஆபரேஷன் நடைபெற்றது. கழுத்தில் இருந்த கட்டியைக் கத்தியால் வெட்டி அகற்றும்போது நோயாளி அலறவில்லை. கத்தி இயங்கும் ஓசையைத் தவிர வேறு சத்தங்கள் எதுவுமே ஆபரேஷன் தியேட்டரில் கேட்கவில்லை. டாக்டர்கள் ஆச்சர்யத்தில் மூழ்கினார்கள். உடனடியாக உலகம் முழுக்க இந்தப் புதுமை பரவியது. லட்சக்கணக்கான நோயாளிகள் நம்பிக்கையுடன் மருத்துவமனைகளுக்கு வந்தார்கள்.

வில்லியம் மார்டன் என்ற ஒற்றை மனிதரின் கற்பனைதான் இந்த உலகத்துக்கே பெரும் நன்மை செய்தது. இது சக மனிதர்கள் மீதான கருணையில் பிறந்த கற்பனை. இப்படிக் கற்பனையில் பல வகைகள் உண்டு. ‘புதுமைகள் எல்லாவற்றையும் செய்வதற்குக் கற்பனையே அடிப்படை! நாம் அறிவு கொண்டு சிந்திக்கும் பல விஷயங்களில் இருக்கும் இடைவெளிகளை நிரப்புவது கற்பனைதான்’ என்று மலேசியப் பல்கலைக்கழக விஞ்ஞானி டாக்டர் முர்ரே ஹன்டர் சொல்கிறார். நம் கடந்த கால நினைவுகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தை உருவாக்குவதுதான் நிகழ்காலக் கற்பனையின் சக்தி.

கற்பனையின் சில வகைகள் இங்கே:

- **Creative Imagination:** இது ஒரு சூழலை கற்பனையாக மனதில் நினைத்து, அதை உருவாக்கிக்

காட்டும் முயற்சியைக் குறிப்பிடுகிறது. டைனோசர்கள் மீண்டும் உயிர்பெற்று பூமியில் உலாவினால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து 'ஜுராசிக் பார்க்' திரைப்படம் எடுத்தது இந்த வகைக் கற்பனைதான். அந்தக் கால ஓவியர்கள் பலரது கற்பனைகளில் உருவான கருவிகள்தான், பிற்காலத்தில் அறிவியல் கண்டுபிடிப்புகளாக மாறி நம் வாழ்வை இனிதாக மாற்றின.

- **Intellectual Imagination:** நாம் கற்று அறிந்துகொண்ட விஷயங்களை வைத்து என்ன செய்வது என்ற கற்பனை இந்த வகையிலானது. தொழில், நிர்வாகம், வியாபாரம், ஐ.டி வேலை என்று நாம் இருக்கும் துறைகளில் புதிதாக ஒரு விஷயத்தைச் செய்வதற்கு இந்தக் கற்பனை உதவும்.
- **Effectuative Imagination:** அனுபவங்கள் மூலம் நமக்குக் கிடைத்த தகவல்களை, நம் கனவுகளுடன் இணைத்து புதுமையாக ஒரு விஷயத்தை உருவாக்குவது இந்த வகைக் கற்பனை ஆகும்.
- **Fantasy Imagination:** வரலாறு, புராணங்கள், கதைகள் போன்றவற்றில் இருக்கும் விஷயங்களை வைத்து நம் கற்பனையில் ஒன்றை உருவாக்குவது இந்த வகை ஆகும். கதை, கவிதை, நாடகம், ஓவியம், திரைப்படம், கிராபிக் காட்சிகள் போன்றவை இப்படித்தான் உருவாகின்றன.
- **Active Imagination:** எப்போதோ நடந்த ஒரு விஷயத்தை நினைவுபடுத்தி, அது வேறுவிதமாக நடந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்வது இந்த ரகம். இப்படிக் கற்பனை செய்யும் பலரும் தங்களின் பழைய தவறுகளை நினைத்து வருந்துவது உண்டு. 'இனி இப்படி தவறு செய்யக்கூடாது' என்ற பாடத்தையும் இந்தக் கற்பனையே தருகிறது.
- **Passive Imagination:** பழைய அனுபவங்களின் அடிப்படையில் புதிதாக உங்களுக்குத் தோன்றும் கற்பனைகள் இந்த ரகம். இந்தக் கற்பனையின் தொடர்ச்சியாகவே பலர் புதிய தொழில்களை உருவாக்குகிறார்கள். மக்கள் சந்திக்கும் ஏதோ ஒரு பிரச்சனைக்குத் தங்களுக்குத் தெரிந்த வழியில் தீர்வு தேடுவது, இந்தக் கற்பனைகளின் விளைவாக நிகழ்கிறது.
- **Strategic Imagination:** ஒருவர் தனக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி தனக்கான எதிர்காலத்தைத் திட்டமிடுவது இந்த வகைக் கற்பனை ஆகும். ஒரு பயணத்துக்கான பாதையைத் திட்டமிடுவது போல இந்த வாழ்க்கைப் பயணத்துக்கான கற்பனையும் இருக்கும்.
- **Empathy Imagination:** அடுத்தவர்கள் அனுபவிக்கும் பிரச்சனைகளைப் புரிந்துகொண்டு, அவர்களின் கவலையையும் துன்பத்தையும் தீர்ப்பதற்கு என்ன செய்யலாம் என்று கற்பனை செய்வதே இது! காது கேட்கும் திறனை இழந்தவர்களுக்கான கேட்கும் கருவியை உருவாக்கித் தந்தது உள்ளிட்ட புகழ்மிக்க பல மருத்துவக் கண்டுபிடிப்புகள் இப்படிப்பட்ட கற்பனையின் விளைவாக நமக்குக் கிடைத்தவைதான்!
- **Emotional Imagination:** ஒருவர் வெற்றிக் களிப்பில் இருக்கிறார். அவருக்கு மகிழ்ச்சியைத் தருவதற்கு என்ன செய்யலாம் என்று சிந்திப்போம். ஒருவர் துக்கத்தில் இருக்கிறார். அவருக்கு ஆறுதல் தந்து அந்த துக்கத்தைக் குறைக்க என்ன செய்யலாம் என்று யோசிப்போம். இப்படிப்பட்ட உணர்வுகள் சார்ந்த கற்பனைகள் இந்த ரகம். ●

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 11 இதழ் 3

செப்டம்பர் 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

கே.ஆர்.நாகராஜன்

ஆசிரியர்

த.செ.ஞானவேல்

இதழாசிரியர்

வள்ளி

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
எண். 188, தரை தளம்,
14வது குறுக்குத் தெரு சந்திப்பு,
டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 032.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

கற்பனை ஆபத்தானதா?

பெரும்பாலான நேரங்களில், பலருக்கும் கற்பனை என்பது நல்ல பலன்களையே அளிக்கிறது. வளமான எதிர்காலத்தையும், செழிப்பான வாழ்வையும் நிறைய பேர் கற்பனை செய்து பார்த்து, அவற்றை அடைவதற்காக உழைக்கிறார்கள். ஆனால், சிலருக்குக் கற்பனையே ஆபத்தானதாக மாறுகிறது. அவர்கள் தவறான விஷயங்களையே கற்பனை செய்து கவலையிலும் பயத்திலும் மூழ்குவார்கள். உதாரணமாக, உயரமான மலைப்பாதையில் வாகனத்தில் செல்லும்போது பலரும் இயற்கை அழகை ரசிப்பார்கள். சிலரோ, ‘இங்கிருந்து வாகனம் பள்ளத்தில் விழுந்துவிட்டால் என்ன ஆவது?’ என்று நினைத்து மன உளைச்சல் அடைவார்கள். எதிர்மறைக் கற்பனைகளை நிஜம் என்று நம்புவது ஆபத்து. அது எவரையும் நிம்மதி இழக்க வைக்கும்.

கற்பனையை திசைமாற்றுங்கள்!

நேரத்தைக் கடத்துவதற்காக இன்ஸ்டாகிராமிலும் ஃபேஸ்புக்கிலும் வீடியோக்கள் பார்க்கிறார் ரவி. “இப்பதான் டார்ஜிலிங் போயிட்டு வந்தேன் ஃபிரண்ட்ஸ். நீங்க டார்ஜிலிங் போனா, இந்த இடங்களைப் பார்க்க மறந்துடாதீங்க” என்று ஒருவர் பதிவிட்டிருக்கும் வீடியோவைப் பார்த்ததும் ரவிக்கு ஏக்கம் ஏற்படுகிறது. ‘அவரால் டார்ஜிலிங் போக முடிகிறது. என்னால் இதோ பக்கத்தில் இருக்கிற ஊட்டி கூட போக முடியவில்லையே’ என்று விரக்தியில் மூழ்குகிறார்.

‘நம்மிடம் இது இல்லையே’, ‘நாம் அப்படி வாழ முடியவில்லையே’ என்ற ஏக்கம் ஒருவருக்கு அடிக்கடி ஏற்பட்டால், அவர் தன் கற்பனையை சரியான திசையில் செலுத்தவில்லை என்று அர்த்தம். ‘நமக்கு என்ன அவசியம் தேவை? அதை அடைவதற்கு நாம் என்ன செய்தோம்?’ என்று கற்பனையை திசைதிருப்ப வேண்டும்.

நாம் சட்டத்தின் ஆட்சி நடக்கும், அமைதியான, சுதந்திரமான நாட்டில் வாழ்கிறோம். இன்றும்கூட போர்களின் நடுவே மக்கள் வாழ்கிறார்கள். சர்வாதிகாரிகளின் பிடியில் சிக்கியிருக்கும் நாட்டில் வாழ்கிறார்கள். அவர்களுடன் நம்மை ஒப்பிட்டுக் கற்பனை செய்தால், நாம் எவ்வளவு மேலான வாழ்க்கை வாழ்கிறோம் என்பது புரியும். இந்தக் கற்பனை எவருக்கும் நிறைவு தரும்.

அச்சத்தை அகற்றும் கற்பனை!

பயமே பலரை முடக்கிவிடும். ஒரு வேலையைச் செய்வதற்கு முன்பே, ‘இது இப்படி ஆகிவிட்டால் என்ன ஆவது?’ என்று பயப்படுவார்கள். ஒரு தொழிலைத் தொடங்கும்போதே, ‘இதில் நஷ்டப்பட்டு எல்லாவற்றையும் இழந்தால் என்ன ஆகுமோ’ என்று தூக்கம் தொலைப்பார்கள். இப்படி எல்லாவற்றுக்கும் விபரீதமாகக் கற்பனை செய்து பயத்தில் மூழ்குவோரை Exposure therapy என்ற சிகிச்சை கொடுத்து மனநல மருத்துவர்கள் மீட்கிறார்கள்.

ஒரு மருந்தை நம் உடல் ஏற்கிறதா என்று கையில் சிறிதளவு டெஸ்ட் டோஸ் போட்டு அலர்ஜி வருகிறதா என்று பார்ப்பார்கள் அல்லவா? அப்படி இந்த சிகிச்சையில் பயத்தைக் கொஞ்சமாக எதிர்கொள்ள வைக்கிறார்கள். கற்பனையான சூழலை உருவாக்கிப் பயிற்சி தருகிறார்கள். எதையும் நினைத்து பயந்து ஓடாமல், துணிச்சலுடன் எதிர்கொள்ள இந்தக் கற்பனை உதவுகிறது. விபரீதமான கற்பனைகளைக் குறைத்து, ‘என்ன நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம்’ என்ற நம்பிக்கையை இது அளிக்கிறது.

வயதுக்கு ஏற்ற கற்பனைகள்!

குழந்தைகளின் கற்பனைகள் ஒவ்வொரு வயதுக்கும் ஏற்றபடி மாறும். அதை உணர்ந்து அவர்களைக் கையாள வேண்டும். பேச ஆரம்பிக்கும் குழந்தைகள் தங்களின் நான்கு வயது வரை நிறைய கேள்விகள் கேட்டபடி இருப்பார்கள். பார்க்கும் எல்லாவற்றையும் அவர்கள், 'இது என்ன?' என்று கேட்கும்போது, 'இது குதிரை', 'இது மேகம்' என்று சொல்வதோடு நிற்காமல், அதைப் பற்றி சுவாரசியமான தகவல்களையும் கதைகளையும் சொல்ல வேண்டும். உலகத்தைக் குழந்தைகள் இப்படித்தான் அறிகிறார்கள்.

தாங்கள் அறிந்துகொண்டதிலிருந்து குழந்தைகளின் கற்பனை ஐந்து மற்றும் ஆறு வயதில் நன்கு விரியும். 'டைனோசர் பால் குடிக்குது', 'சிங்கம் டைகர் பிஸ்கட் சாப்பிடுது' என்பது போல நம்பமுடியாத கதைகளைச் சொல்வார்கள், படங்கள் வரைவார்கள். அவர்களைக் கிண்டல் செய்யாமல் அந்தக் கற்பனையை ரசிக்க வேண்டும். அதன்பின் பள்ளியில் முறையாகக் கல்வி கற்கும் அனுபவம் தொடங்கும்போது அவர்கள் தங்கள் பாடங்களிலிருந்து கற்பனையைத் தொடர்வார்கள். லாஜிக் இல்லாத கற்பனைகள் குறைந்துவிடும். இந்த நேரத்தில் பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும். அப்போதுதான் அவர்களின் கற்பனையும் அறிவுத்திறனும் இணைந்து பிரகாசிக்க ஆரம்பிக்கும்.

சரியான கேள்வியைக் கேளுங்கள்!

யூதர்களுக்காக என்று இஸ்ரேல் நாடு புதிதாக உருவானபோது, ரஷ்யாவிலிருந்த கம்யூனிஸ்ட் அரசாங்கம் அந்த நாட்டு யூதர்களை இஸ்ரேல் சென்று குடியேறுவதற்கு அவ்வளவு சீக்கிரம் அனுமதிக்கவில்லை. கடைசியாக அனுமதி கிடைத்தபிறகு ஒரு யூதப் பணக்காரர் ரஷ்யாவை விட்டு வெளியேறுவதற்கு விமான நிலையம் வந்தார். அவர் பையில் ஒரு லெனின் சிலை இருந்ததைப் பார்த்து கஸ்டம்ஸ் அதிகாரிகள், "இது என்ன?" என்று கேட்டனர். "அப்படித் தப்பாகக் கேட்காதீர்கள். 'இவர் யார்' என்று சரியான கேள்வியைக் கேளுங்கள். இன்று ரஷ்யா வளமாக இருக்கக் காரணம் தோழர் லெனின். அவரை தினமும் வணங்குவதற்காகக் கையோடு எடுத்துப் போகிறேன்" என்றார் அவர். அதிகாரிகள் அவரை எந்த சோதனையும் செய்யாமல் அனுப்பி வைத்தனர்.

இஸ்ரேல் வந்து இறங்கியதுமே அந்த நாட்டு கஸ்டம்ஸ் அதிகாரிகள், "இது என்ன?" என்று அதேபோலக் கேட்டனர். "தப்பாகக் கேட்காதீர்கள். 'இவர் யார்' என்று கேளுங்கள். ரஷ்யாவிலிருந்து யூதர்கள் வெளியேறுவதற்குக் காரணம் இவர்தான். இவரை தினம் தினம் திட்டுவதற்காக இந்த சிலையை எடுத்து வந்திருக்கிறேன்" என்றார் அவர். அதிகாரிகள் அவரிடம் வேறு எதுவும் கேட்காமல் அனுப்பிவிட்டனர்.

புது வீடு வாங்கிக் குடியேறியதும், தன் நண்பர்களை விருந்துக்கு அழைத்தார் அந்தப் பணக்காரர். வந்தவர்கள் சிலையைப் பார்த்துவிட்டு, "இவர் யார்?" என்று கேட்டனர். "தப்பாகக் கேட்காதீர்கள். 'இது என்ன' என்று கேளுங்கள். இரண்டு நாட்டு கஸ்டம்ஸ் அதிகாரிகளை ஏமாற்றிவிட்டு, வரி கட்டாமல் நான் எடுத்துவந்த இரண்டு கிலோ தங்கம்" என்றார் அவர்.

தேவை இருப்பவர்களுக்குக் கற்பனைத் திறன் அபாரமாக வேலை செய்யும். ●

கற்பனை உலகைத் திறக்கும் சாவி!

குழந்தைக்கு புத்தகம் வாங்க அப்பா கடைக்குள் சென்றார். பாட்டி வடை சுட்ட கதையை மட்டும் வைத்து ஒரு புத்தகம் இருந்தது.

அதில் நிறைய வண்ணப்படங்கள் இருந்தன. தன் ஏழு வயதுக் குழந்தைக்கு அதை வாங்கலாம் என்று நினைத்தார். விலையைப் பார்த்தார். 150 ரூபாய் என்று இருந்தது. ‘‘அடேயப்பா! வெறும் பாட்டி வடை சுட்ட கதைக்கு 150 ரூபாயா? இந்தக் கதையை நான் ஒரு நிமிஷத்தில் என் குழந்தைக்குச் சொல்லிவிடுவேனே’’ என்று சத்தமாகச் சொன்னார்.

இதைக் கேட்ட கடை மேலாளர் அருகில் வந்து, “சார்! உங்களுக்கு அந்தப் புத்தகத்தை விலையில்லாமலே கொடுக்க முடிவு செய்திருக்கிறோம். வேண்டுமானால் வாங்கிக் கொள்ளுங்கள்” என்றார்.

‘‘அதற்கில்லை... சாதாரண பாட்டி வடை சுட்ட கதைக்கு இவ்வளவு ரூபாய் செலவழிக்க வேண்டுமா என்று யோசித்தேன்’’ என்றார்.

“அந்தப் புத்தகத்தைக் கொடுங்கள்” என்று மேலாளர் வாங்கினார். அதைப் பிரித்துக் காட்டி அந்த அப்பாவிடம் பேச ஆரம்பித்தார்.

“சார், நீங்கள் இதை சாதாரண ‘பாட்டி வடை சுட்ட கதை’ என்று சொல்லிவிட்டீர்கள். ஆனால் இந்தப் புத்தகத்தைப் பாருங்கள். இதிலுள்ள வண்ணப்படங்களைப் பாருங்கள். ஒரு பாட்டியை அப்படியே ஓவியர் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார். அந்தப் பாட்டியின் முகத்தில் இருக்கும் சுருக்கங்கள்கூட தெரிகின்றன. வடை சட்டியில் எண்ணெய் கொப்பளிப்பதைக் கூட பார்க்க முடிகிறது, கவனியுங்கள். காகத்தின் அலகின் கூர்மையை ஓவியர் தத்ரூபமாகக் காட்டி இருக்கிறார். அதன் கண்களில் திருட்டுத்தனம் தெரிகிறது. மரங்களின் இலைகளைப் பாருங்கள். அப்படியே கண்முன்னே அசைவது போலிருக்கிறது...”

அந்த அப்பா திரும்பவும் புத்தகத்தைப் பார்த்தார். மேலாளர் சொன்ன விஷயங்கள் எல்லாம் அவர் கண்ணுக்குத் தெரிந்தன. மேலாளர் தொடர்ந்தார். “உங்கள் ஏழு வயதுக் குழந்தை வெறும் கதையை மட்டும் இதில் படிப்பதில்லை. இந்த வண்ண ஓவியங்களைத் திரும்பத் திரும்ப ரசிப்பதன் மூலமாக ரசனையை, வாழ்க்கையை, சூழலைக் கற்றுக் கொள்கிறது. இந்த வண்ணங்கள் ஒரு குழந்தையின் மனதில் ஏற்படுத்தும் உணர்வுகளை வார்த்தையால் சொல்ல முடியாது.”

இதைக் கேட்ட அப்பா, அந்தப் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். புத்தகத்தைப் பிரித்த குழந்தை, அதில் உள்ள ஓவியங்களில் இவர் பார்க்காத பல விஷயங்களைப் பார்த்துப் பார்த்து சொன்னதைக் கண்டு வியந்தார்.

பல பெற்றோர்கள் குழந்தைகளுக்கான புத்தகங்கள் வாங்கும்போது, இந்தக் கதையில் வரும் அப்பா போல விலையைப் பார்த்து தயங்குகிறார்கள். எழுத்து மட்டும் புத்தகமில்லை. ஆயிரம் எழுத்து செய்யாத வேலையை ஓர் ஓவியம் செய்து விடும்.

ஆகையால் குழந்தைகளுக்கு நிறைய வண்ணப்படங்கள் உள்ள புத்தகங்களை வாங்கிக் கொடுக்கத் தயங்காதீர்கள். அவை, அவர்களின் கற்பனை உலகைத் திறக்கும் சாவி. ●

RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS • SHIRTS
Perfect Match
For Every Occasion

PANCHAA™
HONEST HAND DHOTIS
From Odisha
From the house of
RAMRAJ©


LINEN PARK®
SHIRTS • TROUSERS • FABRICS
by RAMRAJ
UP CLOSE
FINE WEAVE
TEXTURE THAT SPEAKS

RAMYYAM®
SAREES • KURTIS
From the house of
RAMRAJ®

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

வெண்மை

சந்தாதாரர் ஆகுங்கள்!

'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

ஓர் ஆண்டு சந்தா ரூ.200

இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

வங்கிக் கணக்கு விவரம்: Venmaii
A/C No: 1809135000000299
Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch
IFSC Code: KVBL0001809.

மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)

ஒரு வருட சந்தா: ~~ரூ.200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ~~ரூ.380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்

வரிசையில் செல்லும் எறும்புகளின் ஒழுங்கு பற்றி நிறைய கேள்விப்பட்டிருப்போம். ஆனால், முன்னே செல்லும் எறும்பின் பின்னால் ஒழுங்காகச் செல்லும் எறும்புகள் எல்லாம், தங்களுக்கு விதிக்கப்பட்ட வேலையைத்தான் செய்கின்றன. இந்த வரிசைக்குக் கட்டுப்படாமல் அங்கே இங்கே திரிந்து தேடும் ஒற்றை எறும்புதான் புதிதாக உணவு எங்கே கிடைக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கிறது.

எல்லோரையும் போல வழக்கமான பாணியில் சிந்திப்பவர்களும் வேலை செய்பவர்களும், புதிதாக எதையும் உருவாக்குவதில்லை. வித்தியாசமான கோணத்தில் கற்பனை செய்பவர்களால்தான் புதுமைகள் அனைத்தும் படைக்கப்படுகின்றன. உலகின் மிகவும் சக்திவாய்ந்த கருவி என்று 'கற்பனை சக்தி'யைச் சொல்லலாம். இப்படிப்பட்ட கற்பனை சக்தியை மேம்படுத்துவது எப்படி?

- நாள் முழுக்க வேலை பார்த்துவிட்டு வந்து கொஞ்சம் ரிலாக்ஸ் செய்துகொள்ள டி.வி பார்ப்பது, செல்போனில் நேரம் கடத்துவது, சமூக வலைதளங்களில் பொழுதுபோக்குவது ஓகே. ஆனால், நீண்ட நேரத்தை அதற்கு செலவிடாதீர்கள். இப்படிக் காட்சிகளைப் பார்ப்பது உங்களை சிந்திக்க விடாமல் செய்துவிடும். உங்கள் கற்பனையை அவை எந்த வகையிலும் தூண்டாது.

- கற்பனையைத் தூண்டிவிடும் கதைகளைப் படிக்கலாம், கேட்கலாம். அந்தக் கதைகளைப் படிக்கும் அல்லது கேட்கும் முறையை மாற்றுங்கள். உதாரணமாக, 'சாலையில் வேகமாக ஒருவன் பைக்கில் வந்தான்' என்று படிக்கும்போது அந்த சாலை எப்படி இருக்கும், அவன் என்ன பைக்கில் வந்திருப்பான், அவன் என்ன உடை போட்டிருந்தான் என்றெல்லாம் கற்பனையை விரிய விடுங்கள். எல்லா சூழல்களிலும் கற்பனைத்திறனை வளர்க்கும் பயிற்சியாக இது இருக்கும்.

- பாடல்களைக் கேட்கும்போது இசையும் பாடல் வரிகளும் உங்கள் மனதை ஆக்கிரமித்துக்கொள்ளும். பாடலே இல்லாத வெறும் இசை, ஒருவரின் சிந்தனையைக் கிளறிவிடும். எழுதிப் பார்க்க உதவும் வெற்று கரும்பலகை போல அது உங்கள் மனதை மாற்றும். எனவே, பாடல் இல்லாத இசையைக் கேளுங்கள். ஏதேனும் இசைக்கருவியைக் கற்பதும் உதவும். புதிதாக ஒரு விஷயத்தைக் கற்கும்போது நம் சிந்தனை தூண்டப்படுகிறது.

- ஓவியம் வரைந்து பார்ப்பது, களிமண்ணைப் பிசைந்து உருவங்கள் செய்வது என்று ஏதேனும் கலைகளை ஓய்வு நேரத்தில் பழகுங்கள். ஓவியம் வரைவதற்காக ஒரு கிளியைப் பார்க்கும்போது, இதுவரை உங்கள் கண்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் தெரியும்.

கற்பனை சக்தியை மேம்படுத்துவது எப்படி?

களிமண்ணால் மனித உருவம் செய்து, அதன் விரல்களை வடிவமைக்கும்போது உங்கள் விரல்களை ஆச்சர்யமாகப் பார்ப்பீர்கள். நமக்கு நன்றாகத் தெரியும் என்று நம்பிக்கொண்டிருந்த பல விஷயங்களைப் புதிதாகப் பார்க்கும்போது கற்பனை மேம்படும்.

● எதுவுமே செய்யாமல் சும்மா உட்கார்ந்திருப்பது போல கடினமான விஷயம் எதுவும் இல்லை. நம் நேரத்தை வீணடிப்பதற்கு ஏராளமான பொழுதுபோக்குகள் வந்துவிட்ட இன்றைய யுகத்தில், அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு சும்மா உட்கார்வது சாதாரணம் இல்லை. ஆனால், அப்படி உட்கார முடிந்தால் நம்மால் ஆழ்ந்து சிந்திக்க முடியும். பயனுள்ள பல விஷயங்கள் கைகூடும். மூச்சுப்பயிற்சி, தியானம் என்று பழகிக்கொண்டு இப்படி அமர்ந்தால், புத்துணர்வோடு சிந்திக்க முடியும்.

● பகல் கனவு காண்பதும் கற்பனையை மேம்படுத்தும் ஒரு நல்ல பழக்கம்தான். அதிகாலையில் தூக்கத்திலிருந்து விழித்து சில நிமிடங்கள் சும்மா படுத்திருக்கும்போது, எந்த இடையூறுகளும் இல்லாமல் காலையில் வாக்கிங் போகும்போது, குளிக்கும்போது நம் சிந்தனை முழு வேகத்தில் செயல்படுகிறது. அந்த நேரத்தில் பகல் கனவு காண்பது நல்லது. இப்படிக் கற்பனை செய்யும்போது மூளை முழுமையாகத் தூண்டப்படுகிறது என ஆய்வுகள் மூலம் நிரூபித்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் எப்படி இருப்போம் என்று கற்பனை செய்து பகல் கனவு காண்பது நம் முயற்சியை முழுமையாக்கும்.

● இதுவரை செய்யாத ஒரு வேலையைச் செய்வது, போகாத ஓர் இடத்துக்குப் போவது, ஆடாத விளையாட்டை ஆடிப் பார்ப்பது என்பது போல ஏதோ ஒரு புது அனுபவத்தில் இறங்குங்கள். இதற்காகப் பெரிதாகப் பணம் செலவழிக்க வேண்டும் என்பதோ, தொலைதூரத்துக்குச் செல்ல வேண்டும் என்பதோ இல்லை. உங்கள் வீட்டிலிருந்து நடந்து செல்லும் தூரத்தில்கூட இப்படிப்பட்ட அனுபவம் கிடைக்கலாம். புது அனுபவங்கள் உங்களின் கற்பனை சக்தியைத் தூண்டிவிடும்.

● அதே வீடு, அதே மாதிரி இருக்கும் அறை என்று வழக்கமான சூழலில் இருக்கும்போது புதிதாக எந்தக் கற்பனையும் எழாது. எல்லா நாட்களும் ஒரே மாதிரி உங்களின் செயல்பாடுகள் இருந்தாலும், வித்தியாசமான சிந்தனை மனதில் வராது. உங்கள் சூழலையும் செயல்களையும் அவ்வப்போது புதுப்பித்துக்கொண்டே இருங்கள்.

● 'சுவர்களுக்குப் பேசும் சக்தி இருந்தால், அவை எத்தனையோ கதைகள் சொல்லும்' என்று ஒரு பொன்மொழி உண்டு. உங்கள் வீட்டு சமையலறை சுவர் அப்படிப் பேசினால் என்ன கதை சொல்லும்? சும்மா கற்பனை செய்யுங்கள். உங்கள் தெருவில் திரியும் ஒரு நாய்க்குப் பேசும் சக்தி இருந்தால், அது என்ன பேசும்? இந்தக் கற்பனைகளால் என்ன பயன் என்று கேட்கலாம். ஆனால், அடிப்படை வாய்ப்பாடு கற்றுப் பழகும் குழந்தைதான் பிற்காலத்தில் சிக்கலான கணக்குகளை சாதாரணமாகப் போடுகிறது. அப்படி இதுவும் கற்பனையை மேம்படுத்தும் அடித்தளம்தான்!

● நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு வழக்கத்திலிருந்து மாறுபட்டு வித்தியாசமான தீர்வுகளைத் தேடுங்கள். மாட்டு வண்டியை பழக்கப்பட்ட பாதையில் செலுத்தினால், வண்டிக்காரர் கட்டளை போடாமலேயே மாடுகள் சரியான வழியில் போகும். நம் மூளையும் அப்படித்தான் பழக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோட்டை சிறிதாக்க வேண்டுமென்றால், அதைக் கொஞ்சம் அழிக்க வேண்டும் என்றுதான் எல்லோரும் முதலில் சொல்லியிருப்பார்கள். அதன் பக்கத்தில் இன்னொரு பெரிய கோடு போட வேண்டும் என்பது ஒரு புதுமைக் கற்பனை. இப்படி எல்லாவற்றையும் மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து புதுமைத் தீர்வு தேடுங்கள்.

● நீங்கள் சந்திக்கும் எல்லோரையும் கூர்ந்து கவனியுங்கள். அவர்களின் செயல்களைப் பாருங்கள். புதிய மனிதர்களுடன் பழகுங்கள், நிறைய பேருடன் உரையாடுவதில் ஆர்வம் காட்டுங்கள். உங்களிடம் இருக்கும் யோசனைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்போது புதுப்புதுக் கற்பனைகள் உருவாகக்கூடும். ●

நேர்மறைக் கற்பனை செய்யுங்கள்!

ஒரு மன்னனுக்குத் தூக்கத்தில் விபரீதமான ஒரு கனவு வந்தது. யாரோ அடையாளம் தெரியாதவர்களால் தனது பற்கள் அனைத்தும் உடைக்கப்படுவது போலவும், முன்புறம் இருக்கும் ஒரே ஒரு பெரிய பல் மட்டும் மிச்சம் இருப்பது போலவும் கனவு கண்டான்.

அந்தக் கனவு அவனைப் பெரிதும் தொந்தரவு செய்தது. அமைச்சரை அவசரமாக வரவழைத்து அவரிடம் தனது கனவை விவரித்தவன், "இதன் அர்த்தம் என்னவாக இருக்கும்?" என்று கேட்டான். "பயப்படும் அளவுக்கு எதுவும் இல்லை மன்னா! கனவின் பலன் சொல்லும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது வரவழைத்து விளக்கம் கேட்கலாம்" என்றார்.

உடனே நாடு முழுக்க, 'மன்னர் ஒரு கனவு கண்டார். அதற்கு சரியான விளக்கம் சொல்பவருக்குப் பரிசு உண்டு' என்று அறிவிப்பு செய்யப்பட்டது. அடுத்த நாளே அரண்மனைக்கு ஒரு கனவு நிபுணர் வந்தார். மன்னரிடம் கனவு பற்றி விசாரித்த அவர், "இது சோகமான கனவு மன்னா! உங்களின் அன்புக்குரிய உறவினர்கள் அனைவரும் உங்களுக்கு முன்பாக இறந்துவிடுவார்கள் என்று இந்தக் கனவு உணர்த்துகிறது" என்றார். மன்னர் கோபமாகி, "இவரைச் சிறையில் அடையுங்கள்" என்று உத்தரவு போட்டார்.

அடுத்த நாள் இன்னொரு நிபுணர் வந்தார். அவர் கனவு பற்றி விசாரித்துவிட்டு, "இது நல்ல கனவு மன்னா! உங்கள் உறவினர்கள் அனைவரையும்விட நீங்கள் நீண்ட காலம் வாழ்ந்து நாட்டு மக்களுக்கு நல்லாட்சி தருவீர்கள் என்று இந்தக் கனவு சொல்கிறது" என்றார். இதைக் கேட்டதும் மன்னர் சந்தோஷமாகி, அவருக்குப் பரிசுகள் தந்தார்.

இரண்டு பேரும் சொன்னது ஒரே விளக்கம்தான். முதல் நபர் எதிர்மறையாகச் சொன்னார். ஆனால், இரண்டாவது நிபுணர் அதை நேர்மறையான வார்த்தைகள் மூலம் சொன்னார். எந்த ஒரு சூழலிலும் நம் வாழ்வைப் பற்றி இப்படி நேர்மறையாகவே கற்பனை செய்ய வேண்டும். அது நம் தன்னம்பிக்கையை உயர்த்தி சாதிக்கத் தூண்டும்.

ஒருவர் வியாபாரம் அல்லது தொழிலில் நஷ்டத்தை சந்திக்கலாம். 'எனக்குத் தொழில் செய்யத் தெரியவில்லை' என்று விரக்தி அடைந்தால் அவர் முடங்கிப் போவார். 'எதனால் நான் தோற்றேன்? இந்த இடம் சரியில்லையா? சரியான நேரத்தில் இதைச் செய்யவில்லையா? வாடிக்கையாளர்களை ஈர்க்கத் தெரியவில்லையா?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டு காரணத்தைக் கண்டறியும் ஒருவர், அதைச் சரி செய்துகொண்டு அடுத்த முறை ஜெயிப்பார்.

ஒருவர் ஏதோ காரணத்தால் வேலையை இழக்க நேரிடலாம். 'அவ்வளவுதான், என் வாழ்க்கையே முடிந்துவிட்டது' என்று அவர் நொறுங்கிப் போனால், வேறு வாய்ப்புகள் அவர் கண்களுக்குத் தெரியாது. 'இந்த வேலை போனால் என்ன? என் திறமைக்கு இதைவிட சிறந்த வேலை, இதைவிடப் பெரிய நிறுவனத்தில் கிடைக்கும்' என்று தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்தால் நிச்சயம் அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

எவ்வளவு நெருக்கடியான சூழலிலும் எதிர்மறையான கற்பனைகளுக்குள் சிக்காதீர்கள். நேர்மறைக் கற்பனை நல்ல பலன்களைக் கொடுக்கும். ●

தவறான கற்பனை வேண்டாம்!

குறுகலான ஒரு வீதியில் இருசக்கர வாகனத்தில் வந்த ஓர் இளைஞன், வாகனத்தைத் தடுமாறியபடி ஓட்டினான். சற்றே சமாளித்து சாலையோரமாக வாகனத்தை நிறுத்திவிட்டு அதிலிருந்து இறங்கினான். வாகனம் பெரும் சத்தத்துடன் சரிந்து தரையில் விழுந்தது. மின் கம்பத்தைப் பிடித்தபடி நிற்க முயன்றவன், முடியாமல் தடுமாறி விழுந்தான். இதைக் கவனித்த பலரும், "மோசமா குடிச்சிட்டு வண்டியை வேகமா ஓட்டிட்டு வந்து விழுந்து கிடக்கறான் பாரு. இந்தக் காலத்துப் பசங்க இப்படித்தான் இருக்காங்க" என்று திட்டியபடி கடந்து போனார்கள். பார்த்த பலருமே அவனைக் 'குடிகாரன்' என்று முத்திரை குத்தினார்கள். அவர்களின் நினைப்பில் தவறு இருப்பதாக யாருக்கும் தோன்றவில்லை.

ஆனால், மருந்துக் கடையில் மருந்து வாங்க வந்த ஆனந்த் அப்படி நினைக்கவில்லை. விழுந்த அந்த இளைஞன் கண்ணியமாக உடை உடுத்தியிருந்தான். ஹெல்மெட் போட்டிருந்தான். அவன் முதுகில் ஒரு பேக் மாட்டியிருந்தது. ஏதோ ஆபீஸ் போய்விட்டுத் திரும்பி வருபவன் போல இருந்தான். அவன் ஒருவேளை உடல்நலமில்லாமல் விழுந்திருக்கலாம் என்று ஆனந்த் நினைத்தார்.

அந்தக் குறுகலான தெருவில் ஆம்புலன்ஸ் நுழைய முடியாது. ஆனந்த் அந்த வழியாகப் போன ஓர் ஆட்டோவைக் கூப்பிட்டார். ஆட்டோ டிரைவரும் அவருமாகச் சேர்ந்து, மயக்கத்தில் இருந்த அவனை ஆட்டோவில் ஏற்றி, பக்கத்தில் இருந்த டாக்டரிடம் கூட்டிப் போனார்கள். சர்க்கரை அளவு மோசமாகக் குறைந்ததால் அவன் மயங்கிவிட்டான் என்பதைக் கண்டறிந்த டாக்டர், உடனே அவனுக்குச் சிகிச்சை கொடுத்து காப்பாற்றினார்.

அவன் வீட்டு முகவரியை விசாரித்த ஆனந்த், அதே ஆட்டோவில் அவனை வீட்டுக்கு அனுப்பினார். நல்லவேளையாக அவன் வாகனத்துக்கு எதுவும் பாதிப்பு இல்லை. அதை ஆனந்தே ஓட்டிச் சென்று அவன் வீட்டில் விட்டார். அவன் அரசு அலுவலகத்தில் அதிகாரியாக வேலை பார்ப்பதும், அவனுக்கு சர்க்கரை நோய் இருப்பதும், அன்று வேலை காரணமாக சரியாகச் சாப்பிடாமல் இருந்ததில் அந்தப் பிரச்சனை மோசமானதும் தெரியவந்தது. குடிகாரனாக நினைத்து அவனைக் கண்டுகொள்ளாமல் விட்டிருந்தால், அவன் கோமாவுக்குச் சென்று இறந்திருக்கவும் வாய்ப்பு உண்டு.

தவறான கற்பனைகள் ஆபத்தானவை. எந்தக் கற்பனையும் ஆதாரங்கள் மற்றும் வாய்ப்புகள் அடிப்படையில் அமைய வேண்டும். அதற்கு நம்பகத்தன்மை வேண்டும். அடுத்தவர்கள் நமக்கு எதிராக வேலை செய்கிறார்கள் என்ற சந்தேகம்தான் பலரது நிம்மதி பறிபோவதற்குக் காரணம். எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு பார்த்து, அவர்களின் செயல்களுக்கு விபரீத அர்த்தம் கற்பித்துக்கொண்டு பயந்து பயந்து வாழ்கிறார்கள். ஆதாரம் இல்லாத எதையும் அலட்சியம் செய்யுங்கள்.

நம் இலக்குகள் குறித்த கற்பனைகளும் இப்படி ஆதாரங்கள் மற்றும் வாய்ப்புகள் அடிப்படையில்தான் அமைய வேண்டும். பைக் ஓட்டவே பயப்படும் ஒருவர், 'நான் விண்வெளிக்கு ராக்கெட்டில் பறக்க வேண்டும்' என்று ஆசைப்படக்கூடாது. நம் கற்பனைகளுக்கு எல்லைகள் கிடையாதுதான். ஆனால், நம் முயற்சியால் சாதிக்க முடிந்தவற்றுக்கு ஒரு வரையறை இருக்கிறது. நடக்கவே நடக்காத ஒரு விஷயத்தைக் கற்பனை செய்துவிட்டு, 'இது சாத்தியம் ஆகவில்லையே' என மன உளைச்சல் அடையக்கூடாது.

ஆழியார் அறிவுத் திருக்கோயில் முப்பெரும் விழாவில் ராம்ராஜ்!

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் 116–வது ஜெயந்தி விழா, உலக அமைதி தின விழா மற்றும் பத்மபூஷண் விருது பெற்ற டாக்டர் SKM. மயிலானந்தன் அவர்களுக்குப் பாராட்டு விழா ஆகிய முப்பெரும் விழா ஆழியார் அறிவுத் திருக்கோயிலில் ஆகஸ்ட் 14–ம் தேதி நடைபெற்றது.

உலக சமுதாய சேவா சங்கக் கொடியேற்றுதல், இறை வணக்கம், குரு வணக்கம், தவம் ஆகியவற்றைத் தொடர்ந்து நிகழ்ச்சி தொடங்கியது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவரும், உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவருமான அருட்செல்வர் K.R. நாகராஜன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அறிவுத் திருக்கோயில் தலைவரும் பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவருமான டாக்டர் S.V. பாலசுப்ரமணியம் அவர்கள் தலைமை தாங்கினார்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர்கள் அருள்நிதி P.K. ஆறுமுகம் அவர்கள், அருள்நிதி SKY V. சுந்தரராஜ் அவர்கள், அறிவுத் திருக்கோயிலின் அறங்காவலர் திரு. V. ராஜமாணிக்கம் அவர்கள், முன்னாள் சி.பி.ஐ இயக்குனர் பத்மஸ்ரீ திரு. D.R. கார்த்திகேயன் அவர்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கோவை பாரதீய வித்யா பவன் தலைவர் உயர்திரு. B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் சிறப்புரையாற்றினார். உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவரும், பத்மபூஷண் விருதாளருமான அருள்நிதி. டாக்டர் SKM. மயிலானந்தன் அவர்கள் ஏற்புரையாற்றினார். அறிவுத் திருக்கோயிலின் இணை நிர்வாக அறங்காவலர் அருள்நிதி M. சின்னசாமி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவில், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடாக 'வாழ்க்கை வளம்' என்ற நூல் வெளியிடப்பட்டது. பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. நித்தியானந்தன் அவர்கள் நூலை வெளியிட, அறிவுத்திருக்கோவில் அறங்காவலர் திரு. சந்திரசேகர் அவர்கள் பெற்றுக்கொண்டார். வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் கருத்துகளை எளிமையான முறையில் விளக்கும் இந்த நூல், விழாவுக்கு வந்திருந்த 8,500 அன்பர்களுக்கும் ராம்ராஜ் காட்டன் மற்றும் உலக சமுதாய சேவா சங்கம் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது.

திரு. K.R. நாகராஜன் அவர்கள் தனது வரவேற்புரையில், முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற உதவிய ஆழியாறு

அறிவுத் திருக்கோயில் அறங்காவலர்கள், உலக சமுதாய சேவா சங்க நிர்வாகிகள் மற்றும் விழாவுக்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ''அருட்தந்தை அருளிய மனவளக்கலையை எல்லா மக்களிடமும் கொண்டு போய் சேர்த்தால் போதும். இலவசத் திட்டங்கள் எதுவுமே தேவையில்லை. சுவாமி விவேகானந்தர், ஐயா அப்துல் கலாம், அருட்தந்தை ஆகியோர் கண்ட கனவை நனவாக்கலாம்'' என்றார் அவர்.

டாக்டர் S.V. பாலசுப்ரமணியம் அவர்கள் தனது தலைமையுரையில், ''மனவளக்கலை கிராமங்கள்தோறும் செல்ல வேண்டும் என்று வேதாத்திரி மகரிஷி விரும்பினார். அதைச் செய்துவரும் அருள்நிதி SKM. மயிலானந்தன் அவர்களுக்கு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டது பெருமைக்குரியது. இந்த ஆண்டு 13 பேருக்கு மட்டுமே இந்த உயரிய விருதை அளித்தார்கள்'' என்றார். திரு. D.R. கார்த்திகேயன் அவர்கள் தனது வாழ்த்துரையில், ''மனித மனம் அமைதி பெற்றால், குடும்பம் அமைதி பெறும்; உலகமும் அமைதி பெறும். தற்போது போதைப்பழக்கம் அதிகரித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த வேண்டும். உலகம் வளம்பெற தியானம் அவசியமானது'' என்றார்.

விழாவில் சிறப்புரையாற்றிய டாக்டர் B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள், ''கிராமப்புற மக்களுக்கும், இளைய சமுதாயத்தினருக்கும், உலக சமுதாய சேவா சங்கத்தின் மனவளக்கலை பயிற்சிகள் ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளது. பாமர மக்களிடம் மகரிஷியின் கருத்துகள் கொண்டுபோய் சேர்க்கப்படுகிறது. இளைஞர்களிடம் இந்தப் பயிற்சிகளை கொண்டு சேர்க்க வேண்டியது நம் கடமையாகும்'' என்றார். ''எனது சொந்த வாழ்க்கையில் ஏற்படும் இழப்புகள், எனது சமுதாயம் சார்ந்த வாழ்க்கையில் எந்தவிதமான பாதிப்புகளையும் ஏற்படுத்தக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறேன். அதனால்தான் இந்த விழாவுக்கு வந்தேன்'' என்று அவர் குறிப்பிட்டது, அனைவருக்கும் ஒரு வாழ்க்கைப் பாடமாக அமைந்தது.

டாக்டர் SKM. மயிலானந்தன் அவர்கள் தனது ஏற்புரையில், ''கிராம சேவை திட்டத்தை 400–க்கும் மேற்பட்ட கிராமங்களில் செயல்படுத்தி, 1.75 கோடி மக்கள் மனவளக்கலை பயிற்சி பெற்றனர். பல்வேறு இடங்களில் மொத்தம் 220 அறிவுத்திருக்கோயில்கள் தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக யோகா, சித்தா, ஆயுர்வேதா அடங்கிய ஆயுஷ் வைத்திய சாலை உருவாக்க வேண்டும்'' என்றார். முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்திய அனைவரையும் அவர் பாராட்டினார்.

கற்பனைக் கதைகள் குழந்தைகளுக்கு அவசியம்!

நம் பள்ளிகளில் நீதி போதனை என்று ஒரு பாடவேளை உண்டு. வாரத்தில் ஏதாவது ஒரு நாள் ஒரு பாடவேளை அதற்கு ஒதுக்குவார்கள். குழந்தைகளுக்கு நீதிக்கதைகளைச் சொல்லி, அதன்வழியே அறத்தையும் வாழ்க்கை நெறியையும் கற்பிக்கவே இந்தப் பாடவேளை இருக்கிறது. இப்போதெல்லாம் பள்ளிகளில் நீதிபோதனை பாடவேளையும் இல்லை, நீதிநெறியைக் கற்றுத் தர ஆசிரியர்களும் இல்லை. 'நீதிபோதனைக்கு பதிலாக உருப்படியாக ஏதாவது பாடம் சொல்லித் தரலாம்' என்ற நினைப்பே பள்ளிகளில் பெரும்பாலும் இருக்கிறது.

ஆனால், 'நீதிக்கதைகளே குழந்தைகளின் ஆரம்ப கால வளர்ச்சிக்கு உதவும் மிகச்சிறந்த கருவி. கார்ட்டூன்களிலும் ரீல்களிலும் மூழ்கும் குழந்தைகளை விட, கதைகளைக் கேட்டும் படித்தும் வளரும் குழந்தைகள் புதிய விஷயங்களைக் கற்பதில் சிறந்து விளங்குகிறார்கள்' என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். படிக்கும் பழக்கம் தொடர்பாக கடந்த 2024-ம் ஆண்டு செய்யப்பட ஓர் ஆய்வு, 'கதைகள் படிக்கும் குழந்தைகளுக்குக் கற்பனைத் திறன் மற்றவர்களைவிட 35% அதிகம். வார்த்தைகளைக் கற்கும் திறனும் 28% அதிகரிக்கிறது' என்று நிரூபித்துள்ளது.

கதைகளே குழந்தைகளுக்குள் புதிய எண்ணங்களை உருவாக்குகின்றன. வாழ்க்கைப் பாடங்களை மிக எளிமையான வழியில் புரிய வைக்கின்றன. கருணை, பணிவு, நேர்மை, மரியாதை, ஒழுக்கம், குழுவாக இணைந்து எதையும் செய்யும் பண்பு போன்றவற்றைக் கற்றுத் தருகின்றன. அச்சமின்றி எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலைக் கொடுக்கின்றன. கதைகள் படிக்கும் குழந்தைகள், எல்லோருடனும் இயல்பாகப் பழகக் கற்றுக்கொள்கிறார்கள். அக்கறையும் தன்னம்பிக்கையும் அதிகம் கொண்டவர்களாக அவர்கள் மாறுகிறார்கள். அடுத்தவர்களின் உணர்வுகளையும் புரிந்துகொள்கிறார்கள்.

கதைகளின் வழியே குழந்தைகள் புதிய உலகங்களைப் பார்க்கிறார்கள். தினசரி வாழ்வின் நடைமுறைகளைப் புரிந்துகொள்கிறார்கள். சமூக நடைமுறைகளை அறிகிறார்கள். கேள்விகள் கேட்கவும், வித்தியாசமாக சிந்திக்கவும் கற்றுக்கொள்கிறார்கள்.

கதைகள் படிப்பது குழந்தைகளின் கல்விக்கும் உதவுகிறது. கதைகள் படிப்பது மூளையின் 12 வெவ்வேறு பகுதிகளைத் தூண்டிவிடுகிறது என ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். படிக்கும் திறன், படித்ததை ஞாபகம் வைத்துக்கொள்ளும் திறன், மொழிகளைக் கற்கும் திறன், வார்த்தைகளைக் கோர்த்து வாக்கியங்களை உருவாக்கும் திறன், எதையும் கூர்ந்து கவனிக்கும் திறன், ஒரு விஷயத்தை அலசிப் பார்த்து அதற்குத் தீர்வு கண்டறியும் திறன் ஆகியவை இதன்மூலம் மேம்படுகின்றன. எனவே அவர்கள் பள்ளிக்கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள்.

சாதாரணமாகத் தெரியும் கதைகளின் வழியே பல்வேறு விஷயங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்ளும் வகையில் மிகச்சிறப்பான கற்பனைகளை நம் முன்னோர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அதற்குச் சில உதாரணங்கள் இங்கே:

- **எறும்பும் வெட்டுக்கிளியும் கதை:** மழைக் காலத்துக்குத் தேவைப்படும் உணவை கோடையிலேயே எறும்பு சேகரித்து வைத்தது. வெட்டுக்கிளி விளையாடித் திரிந்தது. மழை நாளில் வெட்டுக்கிளி பசியில் தவிக்க, எறும்பு பாதுகாப்பாக இருந்தது. இது கடின உழைப்பு, எதிர்காலத்துக்கான திட்டமிடல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றைக் கற்றுத் தரும் கதை. தேர்வுக்கு எப்படித் தயாராக வேண்டும் என்பதைக் குழந்தைகள் எளிதாக இதன்மூலம் புரிந்துகொள்வார்கள்.

- **தாகத்தில் தவித்த காகம் கதை:** ஒரு காகம் தாகத்தில் தவித்தபோது ஒரு பாத்திரத்தின் அடியில் தண்ணீரைப் பார்த்தது. அதனால் குடிக்க முடியவில்லை. பாத்திரத்தில் கற்களைப் போட்டு தண்ணீர் மட்டத்தை உயரவைத்து குடித்தது. பொறுமை, பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன், வித்தியாசமாக சிந்திக்கும் ஆற்றல் என்று பலவற்றை இது கற்றுத் தருகிறது.

- **நேர்மையான விறகுவெட்டி கதை:** ஏழை விறகுவெட்டி ஒருவர் விறகுகளை வெட்டும்போது கோடரி ஆற்றில் விழுந்துவிட்டது. அவர் அழுதபடி வேண்டியதும் ஒரு தேவதை வந்து ஆற்றிலிருந்து எடுத்துத் தந்த தங்கக் கோடரி, வெள்ளிக் கோடரி ஆகியவற்றை வாங்க மறுத்து தனது பழைய இரும்புக் கோடரியை எடுத்துத் தந்ததும் பெற்றுக்கொண்டார். அவர் நேர்மைக்குப் பரிசாக எல்லாவற்றையும் அளித்தது தேவதை. சரியான தேர்வுகளை எப்போதும் செய்வது, நேர்மையாக இருப்பது ஆகியவற்றைக் கற்றுத் தரும் கதை இது.

- **தொட்டதெல்லாம் பொன்னாகும் கதை:** பேராசைக்கார மன்னன் மிடாஸ், தான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று வரம் கேட்டான். வரம் கிடைத்ததும் அவன் தொட்ட எல்லாமே தங்கமாக மாறின. ஆனால், சாப்பாடு, தண்ணீர் கூட தங்கமாக மாறியதால் சாப்பிட முடியாமல் அவதிப்பட்டான். அன்பு மனைவியும் ஆசை மகளும் அவன் தொட்டதும் தங்கச்சிலைகளாக மாறிவிட, தன் பேராசையை உணர்ந்து அவன் திருந்தினான். பேராசையின் விபரீதம், குடும்ப உறவுகள், சின்னச்சின்ன சந்தோஷங்கள் என்று பலவற்றைக் குழந்தைகளுக்குப் புரியவைக்கும் கதை இது.

- **சிங்கமும் முயலும் கதை:** ஒரு காட்டுக்கு ராஜாவாக இருந்த சிங்கம், தினம் தினம் வெறித்தனமாக எல்லா விலங்குகளையும் வேட்டையாடியது. பயந்த விலங்குகள் போய், தினமும் ஒரு விலங்கை உணவாகத் தருவதாக ஒப்பந்தம் செய்தன. ஒரு நாள் ஒரு புத்திசாலி முயலின் முறை வந்தபோது, அது தாமதமாகச் சென்றது. பசியில் இருந்த சிங்கத்தை கிணற்றுக்குக் கூட்டிச் சென்று, தண்ணீரில் தெரிந்த அதன் நிழலை மற்றொரு சிங்கமாகக் காட்டி, அதைக் கிணற்றில் குதிக்க வைத்துக் காட்டையே காப்பற்றியது. புத்திசாலித்தனம், பலமான எதிரியை எதிர்கொள்ளும் துணிச்சல், வித்தியாசமான சிந்தனை என்று பல பண்புகளை இந்தக் கதைக் கற்றுத் தருகிறது.

இப்படி எல்லாக் கதைகளும் குழந்தைகளுக்குத் தேவைப்படும் ஏதோ ஒரு நீதியை உணர்த்துகின்றன. குழந்தைகளுக்கு நல்ல கதைகளை அறிமுகம் செய்யுங்கள். ●

வெண்மை சந்தா...

மகளிர் தின சிறப்புச் சலுகை!

மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–

இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–
மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

இடைவெளியை நிரப்பிய கற்பனை!

'நமக்கு யாரோ ஒருவர் புதையலைக் கொண்டுவந்து கையில் கொடுக்க வேண்டும். அதுதான் அதிர்ஷ்டம், அதுதான் வாய்ப்பு' என்று பலரும் காத்திருக்கிறார்கள். ஆனால், தங்கள் புதுமைக் கற்பனைகள் மூலம் ஒரு பிரச்சனைக்குத் தீர்வு காண்பவர்கள், அல்லது ஓர் இடைவெளியை நிரப்புகிறவர்கள் போன்றவர்களே அப்படி வாய்ப்பை அடையும் அதிர்ஷ்டசாலிகள் ஆகிறார்கள்.

ஆன்லைனில் ஆர்டர் செய்தால், புத்தகங்களை வீட்டுக்கே தபாலில் அனுப்பிவைக்கும் சேவையைச் செய்ய ஆரம்பிக்கப்பட்டதுதான் அமேசான் நிறுவனம். 'புத்தகங்களைத் தாண்டி மக்களுக்கு எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் நாம் வீட்டில் கொண்டுபோய் கொடுத்தால் என்ன?' என்று அதன் நிறுவனர் ஜெப் பெஜோஸ் கற்பனை செய்தார். அதனால் அமேசான் இன்றைக்கு மாபெரும் வணிக சாம்ராஜ்ஜியமாக வளர்ந்திருக்கிறது. இதுதான் உண்மையான அதிர்ஷ்டம். இ–காமர்ஸ் என்ற புதிய தொழில் துறையே அதன் விளைவாக இன்று வளர்ந்திருக்கிறது.

ஒருவருக்குப் பசிக்கிறது. வீட்டில் சமைக்கவில்லை என்றால் சாப்பிடுவதற்கு உணவகத்துக்குச் செல்ல வேண்டும். அல்லது போய் பார்சலில் வாங்கிவர வேண்டும். இதற்கு பதிலாக உணவை வீட்டுக்கே கொண்டுபோய் டெலிவரி செய்தால் என்ன என்று ஒரு கற்பனை உருவெடுத்தது. அதன் நிஜ வடிவங்களாக ஸ்விக்கி, ஜொமேடோ போன்ற சேவைகள் வந்தன. யாரோ ஒருவர் உணவை சமைக்கிறார், யாரோ இன்னொருவர் சாப்பிடுகிறார். இருவருக்கும் இருக்கும் இடைவெளியை நிரப்பிய கற்பனை அது.

இன்றைக்கும் ஆயிரக்கணக்கான வாய்ப்புகள் கண் முன்னே இருக்கின்றன. அதைக் காண்பதற்கு சரியான கற்பனை அவசியம்.

விருப்பத்தைக் கற்பனை செய்யுங்கள்!

கல்வி, வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று எதிலும் இப்போது நாம் இருக்கும் நிலைக்கும், நாம் இருக்க விரும்பும் நிலைக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது. கற்பனைப் பாலத்தில் ஏறியே அதைக் கடக்க முடியும்.

உடல் எடையைக் குறைக்க டயட் மற்றும் உடற்பயிற்சி செய்ய முயலும் ஒருவர், அதைக் கச்சிதமாகத் திட்டமிட்டால் மட்டுமே செய்ய முடியும். அடுத்த வாரம் எப்படி இருப்பேன், அடுத்த மாதம் எப்படி இருப்பேன், அடுத்த ஒரு வருடத்தில் எப்படி மாறுவேன் என்றெல்லாம் அவர் கற்பனை செய்ய வேண்டும். ஒரு வேலையில் உயர்வு பெற விரும்பும் ஒருவர், அதற்குத் தன்னை எப்படியெல்லாம் தயார்படுத்திக் கொள்வேன் என்று கற்பனை செய்ய வேண்டும். இப்படி ஒவ்வொரு உயர்வையும் கற்பனையில் மனக்கண்களால் பார்க்க வேண்டும்.

கற்பனையான அந்த இடத்தை அடைவதற்கு என்ன செய்யலாம் என்று அடுத்து திட்டமிட வேண்டும். சாத்தியமாகும் கற்பனைகளைச் செய்து, அவற்றை அடைவதற்கு நம்பிக்கையுடன் முயற்சி எடுத்தால், நம் வாழ்க்கை மாறும்.

எப்படிப் பார்க்கிறோம்?!

ஒரு பீட்சாவை குண்டாக இருக்கும் ஒருவரும், ஒல்லியாக இருக்கும் ஒருவரும் ஒரே மாதிரி பார்க்க மாட்டார்கள். குண்டாக இருக்கும் ஒருவர், 'இதுபோன்ற உணவுகளை சபலப்பட்டு சாப்பிட்டதால்தான் இப்படி ஆகிவிட்டேன். இதைத் தவிர்க்க வேண்டும்' என்று நினைப்பார். ஒல்லியாக இருப்பவர், 'இதைச் சாப்பிட வேண்டும்' என்று ஆசைப்படுவார். கத்தரிக்காயை விரும்பிச் சாப்பிடும் ஒருவர் அதை ஆசையுடன் பார்ப்பார். கத்தரிக்காய் பொரியலை சாப்பிடுவது போல கற்பனை செய்வார். கத்தரிக்காய் சாப்பிட்டாலே உடலில் அலர்ஜி ஏற்பட்டு டாக்டரிடம் ஓடக்கூடிய ஒருவர், அதை வெறுப்பாகப் பார்ப்பார்.

கற்பனை ஒவ்வொருவருக்கும் மாறும். அடுத்தவர்களின் கற்பனைகளைக் கேட்டு, அதேபோல நாமும் கற்பனை செய்ய வேண்டும் என்று யாரும் ஆசைப்பட வேண்டியதில்லை.

இல்லாததை உருவாக்கும் கற்பனை!

ஏ.ஐ. எனப்படும் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் உச்சம் பெற்றிருக்கும் இன்றைய காலத்தில், இல்லாத ஒன்றை எளிதில் உருவாக்க முடியும். தாஜ்மகாலையே பார்க்காத ஒருவர், அதன் வாசலில் உட்கார்ந்திருப்பது போல புகைப்படம் எடுத்துக்கொள்ள முடியும். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பறக்கும் உயர்ரக விமானத்தில் பறந்துவந்து இறங்குவது போன்ற கற்பனைக் காட்சியை உருவாக்க முடியும். நம் வீட்டையே பெரிய அரண்மனை போல மாற்றிக் காட்டி, செல்வச் செழிப்புக்கு மத்தியில் நாம் இருப்பது போல சித்தரிக்க முடியும். இதன் விபரீத வடிவமாகத்தான், நடக்காத ஒன்றை நடந்தது போல சித்தரிக்கும் ஏ.ஐ காட்சிகள் பலவும் உருவாக்கப்படுகின்றன.

கற்பனை நம்மை எங்கே வேண்டுமானாலும் கூட்டிச் செல்லும். எதை வேண்டுமானாலும் உணர வைக்கும். எந்த ஒரு விஷயத்தின் நேர்மறைப் பக்கத்தையும் பார்க்க முடியும்; எதிர்மறைப் பக்கத்தையும் பார்க்க முடியும். தவறாக முடிந்த எதையும் சரியாகச் செய்வது எப்படி என்பதையும் கற்றுக்கொள்ள முடியும்.

சரியான கற்பனை அவசியம். இன்று நாம் இருக்கும் நிலையை மறந்துவிட்டு மாய உலகில் வாழ்வது போலக் கற்பனை செய்வது தவறு. நாளை நாம் வளமாக வாழ என்ன தேவை என்று கற்பனை செய்து, அதை அடைவதற்கு முயற்சி செய்வதே சரியான வாழ்க்கை.

கற்பனையில் நிஜத்தை வரைபவர்!

ஆட்டிசம் பாதிப்புள்ள குழந்தைகளைப் பலரும் பரிதாபத்துடன் பார்க்கிறார்கள். ஆனால், அவர்களிடமும் தனித்திறமைகள் இருக்கும் என்பதைப் பெரும்பாலானவர்கள் உணர்வதில்லை. பிரிட்டனைச் சேர்ந்த கட்டட வடிவமைப்பாளர் ஸ்டீபன் வில்ட்ஷயர். ஆட்டிசம் பாதிப்பால் கற்றல் திறன் குறைபாடு கொண்ட இவரைப் பள்ளியில் கிண்டல் செய்தார்கள். ஆனால், சில நிமிடங்களே பார்த்த ஒரு காட்சியைக் கச்சிதமாகக் கற்பனை செய்து வரைந்து ஆச்சர்யப்படுத்தும் அபூர்வ திறமை இவருக்கு இருக்கிறது.

நியூயார்க் நகரை வெறும் 20 நிமிடங்கள் ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்த்துவிட்டு அப்படியே துல்லியமாகத் தன் கற்பனையிலிருந்து மிகப்பெரிய ஓவியமாக இவர் வரைந்ததைப் பார்த்து பலரும் மிரண்டு போனார்கள். இப்படி உலகின் பல நகரங்களை இவர் வரைந்திருக்கிறார். தன் கற்பனைகள் மூலம் நிஜத்தை உருவாக்குகிறார் இவர்.

நினைவாற்றலும் கற்பனையும்!

எப்போதோ நடந்த சம்பவங்களை, கேள்விப்பட்ட தகவல்களை, படித்து மற்றும் பார்த்து அறிந்து கொண்ட விஷயங்களை மூளையில் சேமித்து வைத்திருந்து மீண்டும் ஞாபகப்படுத்துவது நினைவாற்றல். கற்பனை என்பது கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று காலங்களைக் கடந்து ஒவ்வொன்றையும் மனதுக்குள் உருவாக்குவது.

நினைவாற்றலும் கற்பனையும் வெவ்வேறு விஷயங்கள் போல தோன்றினாலும், ஒரே பாதையில் எதிரெதிர் திசையில் பயணிக்கும் பயணிகள் என்று இரண்டையும் சொல்லலாம். உதாரணமாக, நகரத்தில் வசிக்கும் ஒருவர் தனது சொந்த ஊரில் இருக்கும் வீட்டை மாற்றிக் கட்ட நினைக்கிறார். அந்த வீட்டின் தோற்றம் அவர் நினைவாற்றலில் இருக்கும். வீட்டின் முன்பக்கம் இருக்கும் சுற்றுச்சுவரை அகற்றிவிட்டு, வாசலை இன்னும் பெரிதாக்கி, சுவரை உயர்த்திக் கட்டுவதை அவர் மனதில் கற்பனை செய்கிறார். இந்த இரண்டு செயல்களிலுமே அவரது மூளை, துண்டு துண்டாக இருக்கும் பலவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு காட்சியை உருவாக்குகிறது. எனவே, இரண்டுமே கிட்டத்தட்ட ஒரே மாதிரி செயல்கள்தான்!

டெமிஸ் ஹஸ்ஸாபிஸ் என்ற விஞ்ஞானி இதை நிரூபித்தார். நரம்பியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்த ஆராய்ச்சியாளரான ஹஸ்ஸாபிஸ், நோபல் பரிசு வென்றவரும்கூட! இவர் நினைவாற்றல், கற்பனை, மறதி நோய் ஆகியவை குறித்து ஆராய்ச்சி செய்துவருகிறார். இவரது ஆராய்ச்சி ஒன்று பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது. அதாவது, அம்னீஷியா எனப்படும் நினைவாற்றல் குறைபாடு பாதிப்பு ஏற்பட்டவர்களுக்கு, அதன்பின் புது அனுபவங்களைக் கற்பனை செய்யும் சக்தியும் இல்லாமல் போய்விடுகிறது என்பதே அவர் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்த உண்மை.

மூளையின் ஹிப்போகேம்பஸ் என்ற பகுதியே நினைவாற்றலுக்குப் பொறுப்பானது. அதில் பாதிப்பு ஏற்பட்டால் நினைவாற்றல் குறைபாடு வருகிறது. அதே பகுதிதான் ஒருவரின் கற்பனைத் திறனுக்கும் பொறுப்பு என்கிறார் ஹஸ்ஸாபிஸ். ஒரு வீடியோவில் 'பிளே' பட்டனை அழுத்தினால் காட்சிகள் ஓடுவது போல, நினைவாற்றல் என்பது பழைய காட்சியை அல்லது விஷயத்தைத் திரும்ப மனதுக்குள் ஓட்டிப் பார்ப்பது என்று இதுவரை நாம் நினைத்து வந்தோம். ஹஸ்ஸாபிஸ் இதை மறுக்கிறார்.

ஏதோ ஒரு பழைய விஷயத்தை நாம் நினைவுபடுத்தும்போது, நம் மூளை எங்கெங்கோ துண்டு துண்டாக சிதறிக் கிடக்கும் உண்மைகளைக் கோர்த்து ஒரு வடிவத்தை உருவாக்குகிறது. ஒரு கற்பனையை உருவாக்கும்போது, நம் அனுபவங்களிலிருந்து ஒன்றைப் புதிதாக ஏற்படுத்துகிறது. அதாவது, நினைவாற்றல் என்பது பழைய வீட்டையே மீண்டும் அதேபோல கட்டுவது, கற்பனை என்பது புதிதாக வேறு வீட்டைக் கட்டுவது!

நாம் பார்க்காத, யோசிக்காத, அனுபவிக்காத ஏதோ ஒன்றைக் கற்பனையில் உருவாக்க முடியாது. கடந்த காலத்தில் ஏதோ ஒரு தருணத்தில் நம் ஆழ்மனதில் எழுந்த ஆசைகளின் அடிப்படையில்தான், நாம் விரும்பிய விஷயங்களை வைத்துதான் நம் எதிர்காலத்துக்கான கற்பனையை உருவாக்குகிறோம். அந்தக் கற்பனைகள் நமக்கும் மற்றவர்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாதவையாக இருக்க வேண்டும். ●

டெல்லி கம்பன் கழக விழாவில் ராம்ராஜ்!

டெல்லியில் கம்பன் கழகம் சார்பில் நடத்தப்பட்ட 2026–ம் ஆண்டுக்கான இரண்டு நாள் கம்பன் திருவிழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் கலந்துகொண்டார். விழாவில் திரைக்கலைஞர் திரு. சிவகுமார் அவர்கள் எழுதிய 'கம்பராமாயண உரை' நூலினை மாண்புமிகு உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. அரங்க மகாதேவன் அவர்கள் வெளியிட, திரு. கே.ஆர். நாகராஜன் அவர்கள் பெற்றுக் கொண்டார். கம்பராமாயணத்தின் சிறப்புகள் குறித்து விழாவில் அவர் உரையாற்றினார்.

விழாவில் தினமணி நாளிதழ் ஆசிரியர் திரு. கி.வைத்தியநாதன், கம்பவாரிதி இலங்கை திரு. ஜெயராஜ், முனைவர் சேது குமணன், டெல்லி கம்பன் கழக தலைவர் கே.வி.கே.பெருமாள், செயலாளர் திரு. முத்துவேல் மற்றும் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

ராம்ராஜ் நடத்திய திருப்பூர் கம்பன் விழா!

திருப்பூர் கம்பன் கழகத்தின் கம்பன் விழா–2026, கடந்த 02.08.2026 ஞாயிறு அன்று திருப்பூர் ஹார்வி குமாரசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. திருப்பூர் கம்பன் கழகத்தின் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவருமான அருட்செல்வர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் அப்துல் கலாம் அவர்களால் துவங்கப் பெற்று, கடந்த 18 வருடங்களாக மிகச் சிறப்பாக இந்த விழா நடைபெற்று வருவதற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழாவில் பேராசிரியர் சிவகாசி. ராமச்சந்திரன் அவர்கள் நடுவராகப் பொறுப்பேற்ற பட்டிமன்றம் நடைபெற்றது. கூடவே, 'கம்பன் எனும் கொம்பன்' என்ற தலைப்பில் சொல்லரங்கம் நடைபெற்றது. சுமார் 1,200 பேர் இவ்விழாவில் பங்கேற்று மகிழ்ந்தனர். விழா ஏற்பாடுகளை கம்பன் கழக நிர்வாகிகள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

வழிகாட்டிய வானவில் நரி!

காட்டில் எல்லா நரிகளும் சிவந்த நிறத் தோலுடன் இருக்க, ஒரே ஒரு நரி மட்டும் வானவில் மாதிரி வண்ணமயமான தோலுடன் இருந்தது. இரவிலும் அதன் உடல் மின்மினிப்பூச்சி போல ஒளிர்ந்தபடி இருக்கும். "நீ கோமாளி மாதிரி இருக்கே" என்று மற்ற விலங்குகள் அதைக் கிண்டல் செய்தன. அவமானம் தாங்காமல் அந்த நரி சேற்றில் புரண்டு தன் நிறத்தை மறைக்க முயன்றது. ஆனாலும் அதன் உடல் ஒளிர்ந்தபடி இருந்தது.

ஒருநாள் இரவு கடுமையாக இடி இடித்து மழை பெய்தது. காட்டு விலங்குகள் எல்லாம் தங்கள் குகைக்கோ, வளைக்கோ போக முடியாமல் தவித்தன. வானவில் நரி தன் வெளிச்சத்தால் எல்லோருக்கும் வழிகாட்டி, பத்திரமாகக் கூட்டிப் போனது. மறுநாள் விடிந்ததும் எல்லா விலங்குகளும் அதனிடம் வந்து, "உன் வெளிச்சம்தான் எங்களைக் காப்பாற்றியது" என்று பாராட்டி நன்றி சொல்லின. வானவில் நரி முதன்முறையாக தன் நிறத்தையும் வெளிச்சத்தையும் எண்ணி பெருமைப்பட்டது.

நீதி: எல்லோரையும் போல இல்லாமல் வித்தியாசமாக இருப்பது அவமானம் இல்லை.

குழந்தைகளுக்கான கற்பனைக் கதைகள்

மேஜிக் கூழாங்கல்!

குட்டிப்பையன் கவின் அடிக்கடி கோபத்தில் எல்லோரையும் திட்டுவான். ஒருநாள் கோபத்தில் ஆற்றங்கரைக்குப் போன அவனுக்கு, வானவில் போல ஏழு நிறத்தில் ஒரு கூழாங்கல் கிடைத்தது. 'வானவில் கூழாங்கல்லை யாருமே பார்த்ததில்லை. இது மேஜிக் கல்' என்று நினைத்து பத்திரமாகத் தன் பாக்கெட்டில் வைத்தான்.

அவன் வீட்டுக்குப் போனபோது 'தலைவலி' என்று சொல்லி அம்மா படுத்திருந்தார். 'அம்மாவுக்குத் தலைவலி சரியாக வேண்டும்' என்று மனசுக்குள் சொன்னபடி அம்மாவின் தலையைத் தடவிவிட்டான். 'எனக்கு சரியாகிடுச்சு' என்றார் அம்மா. 'இது கூழாங்கல்லின் மேஜிக்' என்று கவின் நினைத்தான். அதன்பின் அவன் தன் நண்பனைப் பார்த்து சிரித்ததும் அவன் சிரித்தான். பரிசுகள் கொடுத்தபோது ஆசிரியை சிரித்தார். அன்பாகப் பேசியபோது தங்கை சிரித்தாள்.

ஒருநாள் ஆற்றில் குளிக்கும்போது அந்தக் கூழாங்கல் தொலைந்துவிட்டது. ஆனாலும் அவனைச் சுற்றி இருப்பவர்கள் அவனிடம் அன்பாகவே இருந்தார்கள். கூழாங்கல்லில் எந்த மேஜிக்கும் இல்லை, தான் கோபத்தை விட்டதுதான் இதற்குக் காரணம் என்பது அவனுக்குப் புரிந்தது.

நீதி: அன்பைவிட சிறந்த மேஜிக் உலகில் இல்லை.

நெருப்பை மறந்த டிராகன்!

டிராகன்கள் வாயைத் திறந்தால் நெருப்பைக் கக்கும். ஒரு குட்டி டிராகனுக்கு மட்டும் வாயிலிருந்து நெருப்பு வராமல் புகை மட்டுமே வந்தது. அது தனியாக மலைக்குப் பின்னால் பதுங்கி எவ்வளவோ பயிற்சி செய்து பார்த்தது. ஆனாலும் புகைதான் வந்தது. எல்லா டிராகன்களும் அதை 'டேய், புகைப் பையா' என்று கேலி செய்தன.

ஒருநாள் மின்னல் தாக்கி டிராகன் காடு தீப்பற்றிக் கொண்டது. டிராகன் முட்டைகளும் குஞ்சுகளும் இருந்த பகுதியை நோக்கி நெருப்பு மளமளவென பரவியது. மற்ற டிராகன்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தன. புகை டிராகன் முன்னால் போய் வாயைத் திறந்து நிறைய புகையைக் கக்கியது. அந்தப் புகையில் நெருப்பு அணைந்தது. மற்ற டிராகன்கள் அதைக் கட்டிப் பிடித்து, "உன் புகைதான் எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றியது" என்று புகழ்ந்தன.

நீதி: ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை இருக்கிறது.

தூங்கப் போகாத சூரியன்!

ஒருநாள் சூரியனுக்கும் நிலாவுக்கும் 'யார் பெரிய ஆள்' என சண்டை வந்தது. "நான்தான் உலகத்துக்கே வெளிச்சம் தருகிறேன்" என்றது சூரியன். "நான்தான் மக்களுக்கு நிம்மதியான தூக்கம் தருகிறேன்" என்றது நிலா. 'யார் முக்கியம் என்று பார்த்துவிடலாம்' என்று இரண்டும் சபதம் எடுத்தன.

அடுத்த நாள் மாலையில் சூரியன் அஸ்தமனம் ஆகவில்லை. பிரகாசமாக வெளிச்சம் இருக்க, மக்கள் சோர்ந்து போனார்கள். எல்லோரும் தூங்க முடியாமல் தவித்தார்கள். உலகமே ஓய்வு வேண்டி கெஞ்சியது. அதன்பின் நிலா வந்து அவர்களுக்கு ஓய்வு கொடுத்தது. அடுத்த நாள் காலையிலும் விடியாதபடி நிலா பார்த்துக்கொண்டது. கோழி கூட எழுந்து கூவவில்லை. உலகத்தில் எந்த வேலையுமே நடக்கவில்லை.

சூரியனும் நிலாவும் சந்தித்து, "நாம் ரெண்டு பேருமே அவரவர் வேலையைச் செய்வது அவசியம்" என்று சமாதானம் ஆகின.

நீதி: குழுவாக இணைந்து எதையும் செய்தால் ஜெயிக்கலாம்.

மழையை மறந்த மேகம்!

ஒரு குட்டி மேகம் வானத்தில் புதிதாகப் பிறந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தது. மற்ற மேகங்கள் கருமை நிறமாக மாறி மழை பெய்ததை அது பார்த்தது. ஆனால், எப்படி மழை பெய்ய வைப்பது என்பது அதற்கு மறந்துவிட்டது. அது தன்னைச் சுருக்கிப் பார்த்தது, விரித்துப் பார்த்தது, பந்து போல சுருண்டு பார்த்தது. என்ன செய்தாலும் அதனிடமிருந்து மழை வரவில்லை.

கீழே இருக்கும் செடிகள் எல்லாம், இந்தக் குட்டி மேகத்திலிருந்து மழை கொட்டும் என்று மேலே மேலே பார்த்தன. அந்த செடிகள் வெயிலில் காய்வது தெரிந்தும் தன்னால் மழையைத் தர முடியவில்லையே என்று குட்டி மேகத்துக்கு அழுகை வந்தது. உடனே அதிலிருந்து கொஞ்சம் மழை பெய்தது. "ஓ! இப்படித்தான் மழை பெய்யணுமா?" என்று அது தனக்குள் கேட்டுக்கொண்டு மீண்டும் அழுதது. இப்போது நன்றாக மழை பெய்தது. செடிகள் நன்றி சொல்ல, குட்டி மேகம் உற்சாகமாக சிரித்தது.

நீதி: முயற்சி செய்தால் எதையும் கற்றுக்கொள்ளலாம்.

கற்பனையைப் பயன்படுத்துவது எப்படி?

பொய் சொல்வதற்காகத் தங்கள் கற்பனையைப் பயன்படுத்துவோர் நிறைய பேர். ஆனால், நிஜமான கற்பனை பல விஷயங்களில் நமக்கு உதவுகிறது. அவை:

- ஒரு வேலையை முடிக்க வேண்டும். அதில் தவறோ, தோல்வியோ ஏற்படக்கூடாது. நம்மிடம் அதைச் செய்வதற்கு என்னென்ன வசதிகள் இருக்கின்றன, யார் யார் இருக்கிறார்கள் என்று பட்டியல் போடுங்கள். இவர்களை வைத்து அந்த வேலையை சிறப்பாகச் செய்வது எப்படி என்று கற்பனை செய்யுங்கள். அதில் ரிஸ்க் இல்லாத ஒரு வழி நமக்குத் தெரியவரும்.
- எதிர்பாராத ஒரு பிரச்சனை அல்லது நெருக்கடியைச் சந்திக்கிறோம். அதற்கு என்ன தீர்வு என்று நம் அனுபவங்களின் வழியே கற்பனை செய்யலாம். அடுத்தவர்களின் உதவியையும் கேட்கலாம். சரியான தீர்வு எது என்று நமக்குப் புலப்படும்.
- சில விஷயங்களை 'இது இப்படித்தான்' என்று ஏற்றுக்கொள்ள நாம் பழகிவிட்டோம். அதை சவாலாக எடுத்துக்கொண்டு மாற்றுவதற்கு நம் கற்பனை சக்தி உதவும். உதாரணமாக, ஒருவர் தொழிலை விரிவுபடுத்துகிறார். அதற்குத் தேவையான முதலீட்டைத் தன் தொழிலில் இருந்து எடுக்க வேண்டும். அல்லது வங்கிக்கடன் வாங்க வேண்டும். சவாலான கற்பனைகளைச் செய்தால், வேறு அரசுத் திட்டங்கள், முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டுபிடிக்கலாம்.
- நம்மை மோசமாகக் குற்றம்சாட்டிக் கொள்ளும் சுயவிமர்சகர்களாகவே நம்மில் பலர் இருக்கிறோம். அதனால், எந்த ஒரு புது யோசனை நம் மனதில் தோன்றினாலும், 'இதையெல்லாம் செய்து முடிக்கும் வலிமையோ, திறமையோ நமக்கு இல்லை' என்று அதை நம் மனக்குப்பையில் போட்டுவிடுகிறோம். ஒரு யோசனையை சிறப்பாக செயல்படுத்தும் வாய்ப்புகளாக மாற்றுவதற்கு கற்பனைத்திறன் நமக்கு உதவும்.
- வேலை, தொழில் அல்லது வியாபாரத்தில் வழக்கமான விஷயங்களைத் தாண்டி ஒரு புது முயற்சியைச் செய்ய ஆசைப்படுகிறோம். அதைச் செய்வதற்கான வாய்ப்புகள் என்னென்ன என்று மனதுக்குள் அசை போடுவதற்குக் கற்பனைத்திறன் நமக்கு உதவும். எவ்வளவு நாட்களில் செய்வது, எப்படிச் செய்வது, இதில் எங்கெல்லாம் பிரச்சனை வரும் என்று நினைத்துப் பார்த்து எல்லாவற்றையும் திட்டமிட நம்மால் முடியும்.
- இன்றைய சூழலில் பலரையும் வதைப்பது நேர நெருக்கடி என்ற பிரச்சனைதான். ஒரு குறிப்பிட்ட செயலைக் குறித்த நேரத்துக்குள் முடிக்க வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது பரபரப்பு தொற்றிக்கொள்கிறது. 'சரியாக முடிக்க வேண்டுமே' என்ற கவலையும் சேர்ந்துகொள்கிறது. எந்த வேலையையும் எப்படி சீக்கிரம் செய்வது என்று மனதுக்குள் கற்பனை செய்து பார்க்கலாம். ஒரு செயலானது பல கட்டங்களில் நிகழ்கிறது. ஒவ்வொரு கட்டத்தையும் தனித்தனியே யோசிக்கலாம். அதை வேகமாக முடிக்க வேறு சுலபமான வழிகள் இருப்பது தெரியவரும்.
- ஒரு செயலைச் செய்யும்போது பாதியிலேயே குழப்பம் அடைந்து, அதைக் கைவிடலாமா என்று நினைப்போம். அந்த நேரத்தில் மனதைக் கலங்கவிடாமல் தெளிவாக யோசித்துப் பார்த்தால், அதைச் செய்து முடிப்பதற்கான வேறு வாய்ப்புகள் தெரியலாம். நமக்குத் தேவை, எந்தப் பதற்றமும் இல்லாமல் கற்பனை செய்யும் மனம்தான்.

Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL

RAMRAJ

VESTS

BRIEFS • TRUNKS

Inners for Winners!

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-09-2026. Posted at Tirupur BPC on 5th of every month.